தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

## TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION

## அமைப்பு விதிகள்

26.02.2017 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில்
இறுதி செய்யப்பட்டவை

புதியதோர் உலகம் செய்வோம்

TNGCTA

வெளியீடு : மார்ச் 2017

பேராசிரியர் நரசிங்கம் நிலையம்
எண். 2, சைடோசி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி : 044 - 28516573
தொலைநகலி : 044 - 28414354

# அமைப்பு விதிகள் திருத்தக்குழு



முனைவர் த வீரமணி
மாநிலத் துணைத்தலைவர் / குழுத்தலைவர்



பேரா. சோ சுரேஷ்



முனைவர் ரெ கோவிந்தராஜ்



முனைவர்
ஆ கோபாலகிருஷ்ணன்



முனைவர் ப ரமேஷ்



முனைவர் க பாலமுருகன்



முனைவர் சு மஞ்சுநாதன்

தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

## TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION

## அமைப்பு விதிகள்

26.02.2017 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில்
இறுதி செய்யப்பட்டவை

TNGCTA

வெளியீடு : மார்ச் 2017

பேராசிரியர் நரசிங்கம் நிலையம்
எண். 2, சைடோசி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி : 044 - 28516573
தொலைநகலி : 044 - 28414354

## முகவுரை

1971 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21ஆம் நாள் புதுக்கோட்டை அரசினர் கல்லூரிகளின் ஆசிரியர்கள் ஒன்று கூடி "தமிழ்நாடு அரசினர் கல்லூரி ஆசிரியர் கழகம்" எனும் அமைப்பினை முதன்முதலில் நிறுவி அதற்கென விதிமுறைகளை ஏற்படுத்தினர். பின்னர் 1971ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 14ஆம் நாள் திருச்சித் தமிழ்ச் சங்க கட்டடத்தில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் இவ்வமைப்பு மாநில அளவிலான அமைப்பாக உருவாகியது. இம்மாநாட்டில்தான் முதன் முதலில் அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டன.

பின்னர் 1980 ஆம் ஆண்டு சென்னை ஹேமாலினி திருமண மண்டபத்தில் கூடிய மாநிலப் பொதுக்குழு, ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த அமைப்பு விதிகளை முறையாகத் திருத்தி புதிய அமைப்பு விதிகளை ஏற்படுத்தியது. இது ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டது.

கழகம் தொடங்கப்பட்டபோது பதிவு செய்யப்பட்ட அமைப்பாகவே இருந்தது. பின்னாளில் 1980இல் தமிழ்நாடு அரசால் அறிந்தேற்பு பெற்ற அமைப்பாக ஆகியது. கழகம் தோன்றிய போது "மனிதச் சிந்தனைக்கு அப்பாற்பட்ட அறிவைப் பின்பற்றுவோம்" என்பது கழக இலக்காக இருந்தது. 1980இல் "புதியதோர் உலகம் செய்வோம்" என மாற்றி அமைக்கப்பட்டது. கழகப் பெயர் பொறித்த வட்டத்திற்குள் மூன்று ஐந்து முகக் குத்துவிளக்குள் எரிந்த வண்ணமாகவே கழகச் சின்னம் இருந்தது. இதுவும் 1980இல் தான் கழகப் பெயர் பொறித்த வட்டத்திற்குள் உலகைப் பின்புலமாகக் கொண்ட தமிழகமும் அதனுள் சுடரும் அகல் விளக்குமாக மாற்றப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மாநில மாநாட்டின் போது நடைபெறும் பொதுக்குழுவில்

தேவையான விதித்திருத்தங்கள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர், 06.01.2001இல் நாமக்கல்லில் நடைபெற்ற மாநில பொதுக்குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விதித்திருத்தங்களை உள்ளடக்கிய அமைப்பு விதிப் புத்தகம் ஜனவரி 2003இல் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களியாகும் இப்புத்தகத்திலே சேர்த்துக் கொள்ளப்பட்டே வந்தது. இவ்வகையில் கடைசியாக 22.01.2011இல் தஞ்சை மன்னர் சரபோஜி அரசு கல்லூரியில் நடைபெற்ற மாநிலப் பொதுக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விதித்திருத்தங்களை உள்ளடக்கிய அமைப்பு விதிப் புத்தகம் வெளியிடப்பட்டது.

இந்த அமைப்பு விதிப் புத்தகம் இதற்கெனவே கும்பகோண ஆடவர் அரசு கல்லூரியில் 26.02.2017 அன்று நடைபெற்ற மாநில சிறப்பு பொதுக்குழுவில் முழுமையாக விவாதிக்கப்பட்டு, கிளைகளுக்கு அனுப்பப்பட்டு அவைகளின் ஏற்புடன் வெளியிடப்படுகின்றது. இவ்வமைப்பு விதிகளை உரியவாறு மாற்றங்களைச் செய்திடுவதற்கு நல் ஆலோசனைகள் வழங்கிய முன்னாள் மாநிலப் பொறுப்பாளர்களுக்கு கழகம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G. O. No. 341, Dt.22-03-1980)

TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS ASSOCIATION

நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி-600 005. Ph : 044-2851 6573

Narasingam Nilayam, 2, Sydoji Street, Triplicane, Chennai - 600 005. Fax : 044-2841 4354

Email : tngcta1971@gmail.com


20.08.2016 அன்று திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவில் கழகத்தின் துணைத்தலைவர் (பொது) அவர்களின் தலைமையில் நமது கழக விதிகளில் காலத்திற்கேற்ப உரிய மாற்றங்களையும், தேவையான திருத்தங்களையும் மேற்கொள்வது எனவும், அதற்காக குழு அமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 18.10.2016 அன்று தலைமை நிலையத்தில் நடந்த மாநில ஆட்சிக்குழுக் கூட்டத்தில் முன்னாள் பொறுப்பாளர்களைக் கொண்ட சிறப்பு ஆலோசனைக் குழுவுடன் 6 உறுப்பினர்கள் கொண்ட விதித்திருத்தக்குழு அமைக்கப்பட்டது.

மூன்று கட்டமாக விதித்திருத்தத்தை மேற்கொள்ள முடிவு செய்து கிளைகளிடமிருந்து உரிய பரிந்துரைகளை 06.12.2016 ஆம் நாளுக்குள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. 18.12.2016 அன்று சென்னையில் விதித்திருத்தக்குழு கூடி கிளைகளிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் விதிகளில் தேவையான திருத்தங்களுடன் வரைவு அறிக்கை தயாரித்தது. அதன் அடிப்படையில் 28.01.2017 அன்று வீரபாண்டியில் விதித்திருத்தக்குழு மற்றும் மாநில ஆட்சிக்குழு ஆலோசனை மேற்கொண்டு 'இறுதி வரைவு' உருவாக்கியது.

26-02-2017 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற மாநில சிறப்புப் பொதுக்குழுவில் விதித்திருத்தக் குழுவால் உருவாக்கப்பட்ட "இறுதி வரைவு" மீது விவாதம் நடைபெற்று விதிகள் இறுதி செய்யப்பட்டன. 26-03-2017 (ஞாயிற்றுக் கிழமை) அன்று கரூரில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவில் பொதுக்குழுவில் ஏற்கப்பட்ட அமைப்புவிதிகள் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. இத்திருத்ததில் கழகத்தின் பெயரில் மீண்டும் Collegiate என்று திருத்தம் செய்யப்பட்டது. மதுரை மண்டலத்தைப் இரண்டாகப் பிரித்து சிவகங்கை என்ற புதிய மண்டலம் உருவாக்கப்பட்டது. மேலும், விதித்திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக புதிய விதிகள், கணக்குகளைப் பாரமரித்தல், ஒழுங்கு நடவடிக்கை விதிகளில் மாற்றங்கள், தகவல் மற்றும் தொழில்நுட்பக்குழு உள்ளிட்ட புதிய குழுக்கள் உருவாக்கத் தேவையான விதிகள் மற்றும் கழகம் தொடர்பான படிவங்கள் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளது.

கையொப்பம்

த. வீரமணி

# அமைப்பு விதிகள்

## (BY-LAWS)

**விதி 1. பெயர்**

அமைப்பின் பெயர் தமிழில்: 'தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்', ஆங்கிலத்தில் "Tamilnadu Government Collegiate Teachers' Association" என்பதாகும். ஆங்கிலத்தில் சுருக்கமாக "TNGCTA" என்று குறிப்பிடப்படும். பின்வரும் விதிகளில் ''கழகம்'' என்று தமிழில் குறிப்பிடப்படும்.

**விதி 2. நோக்கங்கள்**

கழகத்தின் நோக்கங்களாவன

அ) கழக உறுப்பினர்களின் பொதுவான பணிசார் நலன்களை மேம்படுத்துதல்.

ஆ) கழக உறுப்பினர்களின் வசதிகளை முன்னேற்றுதல்.

இ) கழக உறுப்பினர்களின் பணி நிலைகள், ஊதியம், படிகள், ஓய்வூதியம், ஓய்வு சார்ந்த பிற பணி நலன்கள் மற்றும் ஆசிரியர் மீதான சமூக மதிப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல், கருத்துக்களை எடுத்துச் சொல்லுதல், பரிந்துரைத்தல்.

ஈ) அனைத்து உறுப்பினர்களிடையிலும் குழு மதிப்புணர்வை மேம்படுத்துதல்.

உ) அனைத்து உறுப்பினர்களிடையிலும், உலகளாவிய அளவில் அனைத்து நாட்டு ஆசிரியர்களிடையிலும், பரிவையும், நட்புறவினையும் மேம்படுத்துதல்.

ஊ) சமூகத்திற்குப் பொருத்தமான சாதி, சமய சார்பற்ற, நாட்டுப்பற்றும், மனித நேயமும் மிக்க, அறிவியல் பார்வை கொண்ட ஜனநாயகக் கல்வி முறையை உருவாக்கப்பாடுபடுதல்.

எ) பொது நோக்கங்களை வென்றடைவதற்காகச் சகோதரச் சங்கங்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுதல்.

ஏ) கல்வியில் சிறப்புத் திறன்கள் மேம்படப்பாடுபடுதல்.

ஐ) சமூக நீதியை அனைவரும் பெறும் வகையில் மாணவர் கல்வி நலனைப் பேணுதல்.

**விதி 3. இலக்கு**

**"புதியதோர் உலகம் செய்வோம்"**

**விதி 4. சின்னம்**

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கழகப் பெயருடன் 'புதியதோர் உலகம் செய்வோம்' எனும் இலக்கு பொறித்த வட்டத்திற்குள் உலகைப் பின்புலமாகக் கொண்ட தமிழகமும், அதனுள் சுடரும் அகல்விளக்கும் கொண்டிருக்கும்.

**விதி 5. முகவரி**

சென்னையில் உள்ள சொந்தக்கட்டடத்தில் கழகத்தின் தலைமையிடம் அமைந்திருக்கும்

| | |
|---|---|
| முகவரி: | பேராசிரியர் நரசிங்கம் நிலையம் |
| | எண். 2, சைடோசி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. |
| தொலைபேசி : | 044 2851 6573 |
| தொலைநகலி : | 044 2841 4354 |
| மின்னஞ்சல் முகவரி: | tngcta1971@gmail.com |
| இணையதள முகவரி: | |

(மேற்காணும் முகவரியில் மாற்றம் ஏற்படும்போது விதியில் இயல்பாக மாற்றப்படும்)

**விதி 6. அலுவல் ஆண்டு**

கழகத்தின் அலுவல் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் தொடங்கி மார்ச்சு 31-ஆம் நாள் முடிய ஆகும்.

**விதி 7. அமைப்பு**

அ) கழகம் ஒரு மாநிலம் தழுவிய அமைப்பாகும். கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து அரசு கலைக் கல்லூரி, அரசு கலை-அறிவியல் கல்லூரி மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளும் மாநில அமைப்புக்கு உட்பட்டனவாகும்.

ஆ) ஒவ்வொரு அரசு கலை, கலை-அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரியும் மாநில அமைப்பின் ஒரு கிளையாகும்.

இ) கழகம் எந்தவித சாதி, மத, இனப் பெயர்களின் அடிப்படையிலோ அல்லது சாதி, மத இனங்களுக்குட்பட்டக் குழுக்கள் அல்லது பிரிவுகளின் பெயர்கள் அடிப்படையிலோ அமைக்கப்பட மாட்டாது.

ஈ) கழகம் அரசியல் கட்சிகளின் அடிப்படையிலும் அமைக்கப்பட மாட்டாது.

**விதி 8. இணைப்பு**

அ) கழகம் இது போன்ற வேறு பணியாளர் கழகத்துடனோ அல்லது கூட்டமைப்புடனோ இணைய விரும்பினால் அதற்கு முன்னதாக அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

ஆ) கழகம் 1973-இல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஊழியர் நடத்தை விதி 16 (அ)-இல் காணப்படும் நிபந்தனைகளுக்குப் பொருந்தி வராத வேறெந்தவொரு கழகத்துடனோ அல்லது கழகங்களின் கூட்டமைப்புடனோ எவ்விதத் தொடர்பும் கொள்ளாது. அத்தகு அமைப்புகளுடன் இணையவும் செய்யாது.

**விதி 9. நன்கொடை, முதலீடு**

அ) கழகம் அரசிடமிருந்தோ அல்லது அதன் சார்பாக அதனால் அதிகாரம் அளிக்கப்பட்டோரிடமிருந்தோ முன் அனுமதி பெறாமல் நன்கொடை திரட்டவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ, அல்லது எப்படிப்பட்ட நோக்கமாயினும் அதனை நிறைவேற்றுவதற்காக என்று நிதி திரட்டுவதில் துணை போகவோ செய்யாது.

ஆ) கழகம் இலாப நோக்கோடு எந்தவித முதலீட்டையும் செய்யாது.

இ) எந்தவொரு உறுப்பினரும் தமது கடமைகளை நிறைவேற்றும் போது அதில் சிக்கலையோ அல்லது செல்வாக்கையோ செலுத்தக்கூடிய எந்தவித முதலீட்டையும் கழகம் செய்யாது என்பதோடு தனது உறுப்பினர்கள் செய்வதற்கும் அனுமதி அளிக்காது.

ஈ) கழகம், இந்தியத் தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 (மத்தியச் சட்டம் XVI 1926) பிரிவு 16-இன் கீழ் தனக்கென நிதிவசதிகளை அமைத்துக் கொண்டுள்ள எந்தவொரு தொழிற்சங்கத்தின் செலவு வகைகளுக்காகவும், பணம் கொடுக்கவோ, நன்கொடை வழங்கவோ செய்யாது.

**விதி 10. முறையீடுகள்**

அ) கழக உறுப்பினர்களின் பொதுவான நலன்கள் தொடர்புடைய பணிநிலைகள் குறித்து அல்லாமல் கழகம் எந்தவிதமான முறையீடுகளையோ அல்லது பரிந்துரைகளையோ அனுப்பாது.

ஆ) தனிப்பட்ட உறுப்பினர்களின் பணி தொடர்பானவற்றில் நீதி வழங்கப்படாமல் இருக்குமானால் அத்தகைய மெய்யான குறைகளைக் களையும் பொருட்டோ அல்லது குறைகளைக் களைவதில் அறிவார்ந்த எல்லைகளைக் கடந்த காலதாமதம் ஏற்பட்டாலோ கழகம் முறையிடும்.

இ) கழகம் செய்யும் எல்லா முறையீடுகளும் உரிய வழியாக அனுப்பப்படும். அம்முறையீடுகளைத் துறையின் அல்லது அலுவலகத்தின் தலைமைக்கே அனுப்பி வைப்பது இயல்பான நடைமுறையாகும்.

**விதி 11. அரசியல் தொடர்பு**

அ) கழகம் எவ்வகையிலும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் அல்லது அமைப்புடனும் தொடர்பு கொள்ளாது. எவ்விதஅரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடாது. எந்தவித அரசியல் இயக்கத்துக்கும் அல்லது நடவடிக்கைக்கும் எவ்விதத்திலும் உதவி அளிக்காது. உறுதுணை புரியாது.

(குறிப்பு: எந்தவொரு இயக்கம் பற்றியும் அது இந்த விதிக்கு உட்பட்டது தானா? என்ற கேள்வி எழும்போது அரசு எடுக்கும் முடிவே இறுதியானது.)

ஆ) கழகம் எந்தவகையிலும் சட்டப்பேரவை அல்லது நாடாளுமன்ற அல்லது உள்ளாட்சி அமைப்பிற்கான தேர்தலில் ஈடுபடவோ, பரிந்துரைக்கவோ வேறுவகையில் குறுக்கிடவோ அல்லது தனது செல்வாக்கைப் பயன்படுத்தவோ செய்யாது.

**விதி 12. தகவல், விளம்பரம்**

அ) கழகம் அரசின் பொதுவான அல்லது சிறப்பான ஆணையை அடியொற்றியோ அல்லது தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றும் நல்லெண்ணத்தின் பொருட்டோ அல்லாமல், பணித்துறைக்குரிய எந்தவொரு ஆவணம் அல்லது தகவலை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ வேறு ஒரு அரசு செய்தி இதழ் அல்லது தகவல் பெறுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள எவருக்கும் வெளியிடாது.

ஆ) கழகம், அரசின் முன் அனுமதி பெறாமல், எந்தவொரு செய்தி இதழ் அல்லது காலாந்திர வெளியீடுகளை முழு உரிமையுடன் அல்லது பகுதி உரிமையுடன் நடத்தவோ அல்லது பதிப்பிப்பதிலும் மேலாண்மை புரிவதிலும் பங்கெடுக்கவோ செய்யாது.

இ) கழகமோ அதன் உறுப்பினர்களோ, அரசு அல்லது அதனால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்றும் நேர்மையாகக் கடமைகளை ஆற்றும் பொருட்டும் அல்லாமல் வானொலி நிகழ்ச்சி, செய்தி இதழ், காலாந்திர இதழ், வெளியீடு ஆகியவற்றில் தம் பெயரிலோ, மற்றவர் பெயரிலோ அல்லது பெயர் குறிப்பிடாமலோ கட்டுரை வரைவதும் கடிதம் எழுதுவதும் கூடாது. ஆனால் முற்றிலும் பண்பாடு, இலக்கியம்,கலை அறிவியல் தன்மை கொண்ட ஒலிபரப்புகளாகவோ, படைப்புகளாகவோ இருப்பின் அவற்றிக்கு அனுமதி தேவையில்லை.

ஈ) கழகம் அரசின் முன் அனுமதி இல்லாமல் தனது உறுப்பினர்களின் சார்பாக எத்தகு முறையீட்டு அறிக்கைகளையும், செய்தி இதழிலோ அல்லது வேறு வகைகளிலோ வெளியிடாது.

உ) அரசின் முன் அனுமதியின்றிக் கழகம் தனது நடவடிக்கைகளைச் செய்தி இதழ்கள் அறிந்து கொள்ள அனுமதிக்காது.

ஊ) கழகத்தின் உறுப்பினர்கள், சாதி, மத, அரசியல் தன்மை கொண்ட கருத்துப் பரப்பல் எதிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டார்கள். இதற்கு மாறான உறுப்பினர்களின் செயல்களுக்குக் கழகம் பொறுப்பேற்காது. அது அவர்களின் சொந்தப் பொறுப்பாகும்.

**விதி 13. அரசைப் பற்றிய திறனாய்வு**

அ) கழகம் எந்தவொரு வானொலி ஒலிபரப்பிலும், செய்தி இதழ்களில் வெளியிடும் தகவல்களிலும் தன் பெயரிலோ அல்லது பெயரில்லாமலோ வெளியிடும் ஆவணங்களில் மற்றும் பொது மக்களுக்காக வெளியிடப்படும் அறிவிப்புகளில் கீழ்க்காணும் தன்மை கொண்ட உண்மைகளை அல்லது கருத்துக்களை வெளியிடாது:

“நடுவண் அல்லது மாநில அரசின் நடப்பில் உள்ள அல்லது அண்மைக்காலக் கொள்கைக்கோ செயல்பாட்டிற்கோ மாறான திறனாய்வில் முடிவது அல்லது நடுவண் அரசுக்கும் எந்தவொரு மாநில அரசுக்கும் இடையில் உள்ள உறவுகளைச் சிக்கலாக்கிவிடும் தன்மை கொண்டவை”.

ஆ) அரசு விதிகளுக்கு ஏற்புடைய மானியங்களை வழங்குதல், அல்லது கல்வி மற்றும் அது போன்று நிறுவனங்களுக்கு ஆதரவாக ஆணைகளைப் பிறப்பித்தல் போன்ற செயல்களை விடுத்து, அரசு வேறு வகையாக நடவடிக்கையில் ஈடுபடும் போக்கைக் கண்டித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவோ அல்லது தீர்மானங்கள் முன்மொழியப்படவோ அல்லது நிறைவேற்றப்படவோ வாய்ப்புள்ளது தெரிந்து, ஓர் அமைப்பு நடத்தும் அதிகாரப் பூர்வமான ஒரு கூட்டம் அல்லது மாநாட்டில் கழகம் பங்கேற்காது.

**விளக்கங்கள்**

i) இந்த விதியைப் பொறுத்தவரையில் அரசின் அறிந்தேற்புப் பெற்றுள்ள அரசு ஊழியர் சங்கங்கள் மற்றும் அவற்றின் கிளைகள், விதிகளுக்குட்பட்ட நடவடிக்கைகளுக்காக வழக்கமாக ஏற்பாடு செய்யும் கூட்டங்கள் அதிகாரபூர்வமற்ற கூட்டங்கள் ஆகா.

ii) முற்றிலும் அரசு பணியாளர்களின் அல்லது அறிந்தேற்புப் பெற்ற அரசு பணியாளர்களின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் தனிப்பட்ட நலனைத் தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் பாதிக்கக்கூடிய பொருள்கள் குறித்து விவாதிக்கக் கூட்டியுள்ள கூட்டத்தில் கழக உறுப்பினர் எவரும் கலந்து கொள்வதைத் தடுக்கும் தன்மையில் இத்துணை விதி இல்லை.

iii) அரசின் எந்தவொரு கொள்கையும் தங்களுக்கு நலன் தரக்கூடியது அல்லது இன்றியமையாதது என்று தோன்றும் வகையில் விளக்கவும், வெளியிடவும் கழகத்திற்கு உள்ள உரிமையைக் கட்டுப்படுத்தவும் சுருக்கவும் கூடிய எதுவும் இந்த விதியில் இருப்பதாகக் கருதுவதற்கு இல்லை.

**விதி 14. பொதுத்தேர்தல்கள்**

அ) கழகம் இந்தியாவிலோ அல்லது வேறு எங்குமோ உள்ள சட்டப்பேரவை, நாடாளுமன்றம் அல்லது உள்ளாட்சி அமைப்பிற்கான எவ்விதத் தேர்தல் தொடர்பாக

i) ஒரு வேட்பாளரின் தேர்தல் தொடர்பான எந்தவிதச் செலவிற்காகவும் தொகை வழங்கவோ நன்கொடை அளிக்கவோ செய்யாது.

ii) எந்தவொருவரின் வேட்பையும் எந்தவகையிலும் ஆதரிக்காது.

iii) ஒரு வேட்பாளராகத் தேர்வு பெறுவதற்கும் அல்லது வாக்காளரைப் பதிவு செய்வதற்குமான பணிகளை மேற்கொள்வதோ அல்லது அவற்றுக்குத் துணைபுரிவதோ செய்யாது.

ஆ) கழகம் இந்தியா அல்லது வேறு எங்கும் உள்ள ஒரு சட்டமன்ற உறுப்பினரை, நாடாளுமன்ற உறுப்பினரை அல்லது உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினரைப் பராமரிக்கவோ அல்லது பராமரிப்புக்காக நன்கொடை வழங்கவோ செய்யாது.

**விதி 15. அயல்நாட்டு அமைப்புக்குத் தகவல்**

கழகம் எந்தத் தகவலையும் அதை நிறுத்தி வைக்கும் உரிமை பெற்ற அரசின் வாயிலாக அன்றி அயல்நாட்டு அமைப்புக்குத் தெரிவிக்காது.

**விதி 16. அரசுடன் தகவல் தொடர்பு**

கழகத்தாலோ அல்லது அதன் சார்பாக ஒரு பொறுப்பாளராலோ, அரசுக்கோ அரசு அதிகாரிக்கோ அளிக்கப்படும் தகவல் மதிப்புக் குறைவாக அல்லது முறையற்ற மொழி நடையைக் கொண்டதாக இருக்கலாகாது.

**விதி 17. அரசுடன் உறவு**

கழகம் அரசோடு தனக்குள்ள உறவுகள் தொடர்பான செயல்களில் தனது நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக எந்த மேலதிகாரி மீதும் அரசியல் அல்லது வெளிப்புறச் செல்வாக்குகளைக் கொண்டு வரவோ அல்லது அதற்கானமுயற்சிகளை மேற்கொள்ளவோ செய்யாது.

**விதி 18. மாணவர் தொடர்பு**

கழகம் தனது நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்காக எந்த வகையிலும் மாணவர்களையோ அல்லது மாணவர் அமைப்புகளையோ பயன்படுத்தாது.

**விதி 19. அரசு ஊழியர் நடத்தை விதிகள்**

கழகம், ஓர் அரசு ஊழியர் எச்செயலைச் செய்தால் அது தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1973, விதி எண்கள் 5,6,10,11,12 அல்லது 18 இல் காணப்படும் கட்டுப்பாட்டு விதிகளுக்கு எதிரானதாக அமையுமோ அது போன்ற செயலைச் செய்யாது என்பதோடு, செய்வதற்குத் துணையும் போகாது.

### விதி 20. வேலை நிறுத்தம்

கழகம் தனது எந்த நோக்கத்தையாவது வென்றடையும் பொருட்டு, அரசுக்கு எதிராக ஒரு வேலை நிறுத்தத்தையோ அல்லது வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்தலையோ செய்யாது.

### விதி 21. அரசுக்கு அளிக்க வேண்டியவை

கழகம் ஆண்டுதோறும் உறுப்பினர் பட்டியல், பொறுப்பாளர்கள் பட்டியல், நடப்பில் உள்ள அமைப்பு விதிகளின் நகல், கழகத்தின் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை ஆகியவற்றை ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின் ஏப்ரல் 30 தேதிக்குள் அரசுக்குக் கிடைக்குமாறு உரிய வழியில் அளித்திட வேண்டும்.

### விதி 22. அமைப்பு விதித் திருத்தம்

அ) கழகத்தின் விதிகளில் எந்த ஓர் அடிப்படைத் திருத்தமும் அரசின் முன் அனுமதி பெற்றே செய்யப்பட வேண்டும். அதோடு வேறு எந்தவொரு சிறு திருத்தமும் தகவலுக்காக உரிய வழியில் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆ) கழகத்தின் அமைப்பு விதிகளில் திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் அதற்கான குழுவினை மாநிலச்செயற்குழு நியமிக்கும். இக்குழுவின் தலைவராக ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவர் செயல்படுவார்.

இ) அமைப்பு விதிகளில் மேற்கொள்ளும் திருத்தம் மூன்று கட்டங்களாக இருத்தல் வேண்டும்.

#### i) முதல் கட்டம்: கிளைகளின் பொதுக்குழுவால் பரிந்துரைக்கப்படுபவை

நடைமுறையில் உள்ள விதிகள் குறித்துக் கிளையின் பொதுக்குழுவில் விவாதிக்கப்பட்டு ஏற்கப்படும் பரிந்துரைகளை விதித்திருத்தக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

#### ii) இரண்டாம் கட்டம் : வரைவு

கழகத்தின் கிளைகளிலிருந்து அளிக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, காலத்திற்கு ஏற்ப தேவைப்படும் மாற்றங்களையும் இயக்கத்திற்கு வலு சேர்க்கும்

வகையிலும் அமைப்பு விதிகளின் வரைவு விதித்திருத்தக்குழுவால் உருவாக்கப்படும். இவ்வரைவு கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**iii) மூன்றாம் கட்டம் : மாநில சிறப்புப்பொதுக்குழுவில் ஏற்கப்படுதல்**

வரைவு குறித்துக் கிளைப்பொதுக்குழுவில் விவாதித்து ஏற்பு/ திருத்தம்/நீக்கம் உள்ளிட்ட கிளையின் பரிந்துரைகள் அதற்கென கூட்டப்படும் மாநில சிறப்புப்பொதுக்குழுவில் தெரிவிக்கப்படவேண்டும். மாநில சிறப்புப்பொதுக்குழுவில் கூடியுள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு ஏற்பு/திருத்தம்/நீக்கம் போன்றவை மேற்கொள்ளப்பட்டு, அமைப்புவிதிகள் இறுதி செய்யப்படும்.

அத்திருத்தங்கள் கிளைகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத கிளைகளால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். விதித்திருத்தங்கள் தொடர்பாக, நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் ஆட்சேபம் தெரிவிக்காத கிளைகள், அத்திருத்தங்களை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

**விதி 23. விதிகளின் விளக்கம்**

இவ்விதிகளின் விளக்கம் தொடர்பாக எக்கேள்வி எழுந்தாலும் அதனை அரசின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும். அதில் அரசின் முடிவே இறுதியானது.

**விதி 24. உறுப்பினர் தகுதி**

அ) தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணியின் கீழ் அரசு கலைக் கல்லூரிகள், அரசு கலை-அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளில் தமிழக அரசால் நேரடியாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரியும் அனைத்து அரசு கலைக் கல்லூரிகள், அரசு கலைஅறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள், நூலகர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி பயிற்றுநர்கள், முதல்வர்கள் மற்றும் மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினராகத் தகுதி உடையோர்.

ஆ) ஒருவர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போதும். பணியிலிருந்து தாமாக விலகிச் செல்லும்போதும் தமது விருப்பத்தின் பேரில் பிற பணிகளுக்குச் செல்லும் போதும் அவரது உறுப்பினர் நிலை தானாகவே முடிந்து விடுகிறது.

இ) பணி ஓய்வு அடைந்து அக்கல்வியாண்டு இறுதி வரை (மே மாதம்) மறு நியமனம் பெற்றுள்ளோர்களைப் பொறுத்தவரை மே மாதம் 31-ஆம் தேதிவரை உறுப்பினர் நிலை தொடரும்.

ஈ) எவர் ஒருவரும் மேலே குறிப்பிட்டுள்ள விதி 24 (அ)-இன் படி தமிழ்நாடு அரசு கல்லூரிகளில் ஆசிரியர் பணியில் இல்லாதவராயின் அவர் கழக நடவடிக்கைகளில் தொடர்புடையவர் அல்லர்.

உ) உறுப்பினர் தமது உறுப்பினர் கட்டணத்தையும், பிற கட்டணங்களையும் அவ்வப்போது முறையாகச் செலுத்தவேண்டும். அவர், தான் சார்ந்துள்ள கிளை, மண்டல, மாநில அமைப்புகளின் அனைத்து ஜனநாயக முடிவுகளுக்கும் கட்டுப்பட்டவராவார். அதோடு அவர் கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமது செயலூக்கமான ஒத்துழைப்பை நல்கவும் கடமைப்பட்டவராவார்.

ஊ) உறுப்பினர் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் நோக்கங்களுக்கு எதிராகவோ அதன் உறுப்பினர்களின் நலன்களுக்கு எதிராகவோ செயல்படக்கூடிய எந்த அமைப்பிலும் உறுப்பினராக இருப்பதோ அல்லது தொடர்பு கொண்டிருப்பதோ கூடாது.

எ) கிளைச்செயலர், மண்டலச்செயலர் மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் கழகம் சார்ந்த செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அளித்தால் அது குறித்து உடனடியாக பொதுச்செயலருக்குத் தெரிவித்தல் வேண்டும். மற்றவர்கள் கழகம் சார்ந்த செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அளிக்கக்கூடாது..

**விதி 25. உறுப்பினர் சேர்க்கை**

அ) உறுப்பினராவதற்கு, படிவம்1 இல் (இணைப்பில் உள்ளது) இரண்டு படிகளில் முதலாண்டு உறுப்பினர் கட்டணத்தோடு

அவர் பணியாற்றும் கல்லூரிக் கிளையின் செயலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ) உறுப்பினர் சேர்க்கை கிளைப் பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

இ) ஒரு கல்லூரிக் கிளையில் இணைந்துள்ள அனைத்து உறுப்பினர்களும் இயல்பாகவே (ipso facto) மாநிலக்கழகத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

ஈ) இதே பணிநிலைகள் குறித்து விவாதிக்கும் பிற துறைவாரி அமைப்புகளில் உறுப்பினராக ஒருவர் இருப்பாரானால் அவரது தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழக உறுப்பினர் நிலை இற்றுவிடும்.

**விதி 26. உறுப்பினர் கட்டணம்**

அ) உறுப்பினர் கட்டணம் என்பது ஒரு உறுப்பினர் மாநிலத்திற்கும் மண்டலத்திற்கும் மற்றும் கிளைக்கும் செலுத்திட வேண்டிய ஓராண்டிற்கான கட்டணமாகும்.

ஆ) இக்கட்டணங்களை விலைவாசி உயர்வு மற்றும் இதர பயணக் கட்டண மாற்றங்களுக்கு ஏற்ப தேவையேற்படின் மாநிலச் செயற்குழு மாற்றி நிர்ணயித்திடும்.

இ) இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு உறுப்பினர் கட்டணத்தை அந்த அலுவல் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் கிளைப்பொருளரிடம் செலுத்திடல் வேண்டும். ஆயினும் ஆண்டு சந்தா செலுத்துவற்கான இறுதி காலக்கெடு அக்டோபர் 31 ஆம் நாள் வரை வழங்கப்படும். அத்தேதிக்குள் செலுத்தாதவர்களின் உறுப்பினர் தகுதி தாமாகவே இற்றுவிடும்.

ஈ) அத்தொகையில் மண்டலத்திற்குரிய கட்டணத்தையும், மாநிலத்திற்குரிய கட்டணத்தையும், கிளைப்பொருளர் தொகையாகவோ, வங்கி வரைவோலையாகவோ, கழக சேமிப்புக்கணக்கிலோ செலுத்தி, கட்டணம் செலுத்திய விவரத்தினை, உறுப்பினர் பெயர்ப்பட்டியலுடன் நவம்பர் மாத இறுதிக்குள் மண்டல, மாநிலப்பொருளருக்குத் தெரிவித்திடல் வேண்டும்.

உ) கருத்தரங்கு, பயிற்சிமுகாம், மாநாடு போன்ற பல்வகைத் தேவைகளுக்காக மாநிலச்செயற்குழுவின் முடிவு படியோ அல்லது மண்டலச்செயற்குழுவின் முடிவுப்படியோ அல்லது கிளைப்பொதுக்குழுவின் முடிவுப்படியோ தேவையான கூடுதல் நிதியினை உறுப்பினர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விதி 27. நிதி**

அ) உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் அனைத்து வகையான கட்டணங்கள், அரசு வழங்கும் உதவித்தொகை, மாநாடு, கருத்தரங்கு, பயிற்சி முகாம் போன்ற பல்வேறு இனங்களுக்கு என பிற கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர அரசு பல்கலைக் கழகங்கள் நிறுவனங்கள் ஆகியவை அளித்திடும் நிதிகள்யாவும் கழகத்தின் நிதியாகக்கருதப்படும். இந்நிதிகள் யாவும் கழகத்தின் நோக்கங்களையும் இதர செயல்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காகவே பயன்படுத்தப்படும்.

**விதி 28. வங்கிக்கணக்கு மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்**

அ) கழகத்தின் நிதி நடவடிக்கைகள் அனைத்தும் வங்கிக்கணக்கின் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆ) கழகத்தின் நிதியை, கழகத்தின் தலைமையிடமான சென்னையில் அரசுடமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் கழகத்தின் பெயரில் சேமிப்புக்கணக்குத் தொடங்கி, கழகத்தின் பொதுச்செயலரும், மாநிலப் பொருளரும் கூட்டாக இயக்குதல் வேண்டும்.

இ) கழகத்தின் பொதுவான செயல்பாடுகளுக்கென ஒரு வங்கிக்கணக்கும் (பொதுக்கணக்கு), குறிப்பிட்ட சில செயல்பாடுகளுக்கென தனியாக வங்கிக்கணக்குகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

i) பொதுக்கணக்கு என்பது கழகத்தின் அன்றாட நடைமுறைகளுக்கான நிதிக்கணக்காகும். சந்தா, பயணப்படி, தினப்படி உள்ளிட்ட கழகத்தின் இதர நடவடிக்கைகள் இக்கணக்கிலிருந்து மேற்கொள்ளவேண்டும்.

ii) உறுப்பினர் நல நிதி, பணிநிறைவு விழா நிதி, மாநாட்டு நிதி, உள்ளிட்ட கழகத்தின் இதர நடவடிக்கைகளுக்கென தனித்தனியாக வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டு நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

iii) குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கென தொடங்கப்பட்டக் கணக்குகள் அதன் பணி முடிந்த பின்னர் வங்கிக்கணக்கு முடிக்கப்பட்டு உபரி நிதி இருப்பின் அதனைக் கழகத்தின் பொதுக்கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

ஈ) கழகம் கட்டடத்திற்கென தனியாக வங்கிக்கணக்கு தொடங்கப்பட்டு கட்டடம் தொடர்பான நிதி நடவடிக்கைகளை அக்கணக்கிலேயே மேற்கொள்ளவேண்டும்.

உ) கழகத்தின் பொதுக்கணக்கிலிருந்து அந்த இனம் தவிர்த்த வேறு எந்த ஒரு காரணத்திற்கும் தொகை தேவைப்படின் மாநிலச் செயற்குழுவின் தீர்மானத்தின் பேரில் மட்டுமே எடுக்கப்படலாம். இவ்வாறு எடுக்கப்படும் தொகை மீள இக்கணக்கில் தவறாமல் செலுத்தப்பட வேண்டும்.

ஊ) கணக்குகள் கீழ்க்காணும் தலைப்பு வாரியாகப் பராமரிக்கப்படல் வேண்டும்.

- i) அன்றாட செலவினம்
- ii) போராட்டம் தொடர்பான செலவினம்
- iii) பணி நிறைவு தொடர்பான செலவினம்
- iv) பயணப்படி மற்றும் தினப்படி செலவினம்
- vi) மேற்கண்டவை தவிர்த்த பிற இனங்கள்

எ) அனைத்து செலவினங்களுக்கும் முறையான பற்றுச் சீட்டுகள் அல்லது சான்றுகள் இருத்தல் வேண்டும். செலவினம் தொடர்பாக, தனியர் உறுதிச்சீட்டு வழங்கும் நடைமுறையானது தவிர்க்க இயலாத சூழலில் மட்டும் அனுமதிக்கப்படவேண்டும்.

ஏ) செலவினங்களுக்கான பற்றுச்சீட்டு அல்லது சான்று இணைக்கப்படும்போது அதன் விவரம் மற்றும் குறிப்புகள் தெளிவாகத் தெரிவித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஐ) அனைத்துக் கணக்குகளும் பொதுச்செயலர் மற்றும் மண்டலச்செயலர் என இருவராலும் கூட்டாக இயக்கப்படுதல் வேண்டும்.

ஒ) கழகத்திற்காக விடுக்கப்படும் காசோலைகளில் பொதுச்செயலர் மற்றும் மாநிலப்பொருளர் என இருவரும் கையொப்பமிடல் வேண்டும்.

ஓ) உறுப்பினர் கட்டணத்தில் 20 விழுக்காட்டினை மண்டலமும் 40 விழுக்காட்டினைக் கிளையும் கழகத்தின் நடவடிக்கைகளின் பொருட்டு ஏற்படும் செலவினங்களுக்கென பெற்றுக்கொள்ள அனுமதியுண்டு. மேற்படி தொகையில் மண்டலம் 10 விழுக்காட்டிற்கு மிகாமலும் கிளை 20 விழுக்காட்டிற்கு மிகாமலும் முன்பணமாகப் பெற்றுக்கொள்ள அனுமதியுண்டு. செலவினங்களுக்கான கணக்குகளை உரிய பற்றுச்சீட்டுகள்/ இரசீதுகளுடன் மாநிலப் பொருளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**விதி 29. தணிக்கை**

அ) கழகத்தின் வரவு செலவுக்கணக்குகள், மாநிலச்செயற்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர் குழுவால் உள் தணிக்கை செய்யப்பட்டு மாநிலச்செயற்குழுவால் நியமிக்கப்படும் தகுதியுடைய பதிவு பெற்ற தணிக்கை அதிகாரியால் ஆண்டு தோறும் ஏப்ரல் மாதத்திற்குள் தணிக்கை செய்யப்பட வேண்டும். இவ்வறிக்கை அடுத்து நடைபெறும் மாநிலச்செயற்குழுவில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட வேண்டும். பின்னர் நடைபெறும் மாநிலப்பொதுக்குழுவில் இவ்வறிக்கைக்குப் பின்னேற்புப் பெறவேண்டும்.

ஆ) மண்டலக்கணக்குகள் ஆண்டுதோறும் மண்டலச் செயற்குழுவால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களால் ஏப்ரல் மாதத்திற்குள் தணிக்கை செய்யப்பட வேண்டும். இந்த அறிக்கை ஒப்புதலுக்காக மண்டலப் பொதுக்குழுக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும். இத்தணிக்கை அறிக்கையின் ஒரு நகல் பொதுச்செயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இ) கல்லூரிக் கிளையின் கணக்குகள் ஆண்டுதோறும் அதன் செயற்குழுவால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களால் ஏப்ரல் மாதத்திற்குள் தணிக்கை செய்யப்பட்டு பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும். தணிக்கையறிக்கையின் நகல்கள் மண்டலச் செயலருக்கும், பொதுச் செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விதி 30. மேலாண்மை**

அ) மாநிலக் கழகத்தின் செயல்பாடுகள் மாநிலச் செயற்குழுவின் பொறுப்பில் இருக்கும்.

ஆ) மண்டலத்தின் செயல்பாடுகள் அம்மண்டலச் செயற்குழுவின் பொறுப்பில் இருக்கும்.

இ) கிளையின் செயல்பாடுகள் அக்கிளைச்செயற்குழுவின் பொறுப்பில் இருக்கும்.

ஈ) கிளைக் கழகச் செயல்பாடுகளில் சிக்கல்கள் தோன்றுமாயின் மண்டலச் செயற்குழு தலையிட்டுத் தீர்வு காணும்.

உ) கிளைக்கழகச் செயல்பாடுகளில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு மண்டலச்செயற்குழுவால் தீர்வு காணப்படாத நிலையிலோ/ மண்டலச் செயற்குழு தலையிடாத சூழலிலோ, மாநில ஆட்சிக்குழு தலையிட்டுத் தீர்வு காண அதிகாரம் உண்டு.

ஊ) கிளை, மண்டலச் செயல்பாடுகளில் சிக்கல் ஏற்படுமாயின் மாநில ஆட்சிக்குழு தலையிட்டு தீர்வுகாணும். தேவையெனில் மாநிலச் செயற்குழுவின் கவனத்திற்கு மாநில ஆட்சிக்குழு கொண்டு சென்று தீர்வைப் பெறும். இத்தீர்வே இறுதியானது.

## மாநிலக் கழக மேலாண்மை

**விதி 31. மாநிலச்செயற்குழு**

அ) கழகத்தின் கிளைச்செயலர்கள், மண்டலத்தலைவர்கள், மண்டலச்செயலர்கள், மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கழகத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர்கள், கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில்நுட்பக்குழு அமைப்பாளர் மற்றும் 'கல்லூரி ஆசிரியர் குரல்' முதன்மைப் பதிப்பாசிரியர் ஆகியோர்களை உள்ளடக்கியது மாநிலச் செயற்குழு என்பதாகும்.

ஆ) கழகத்தின் மாநில அளவிலான செயலாண்மை இதன் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

இ) கிளைச்செயலர்கள், மண்டலத்தலைவர்கள், மண்டலச்செயலர்கள், மாநில ஆட்சிக்குழுவினர் மற்றும் கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் செயற்குழுவில் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாவர்.

ஈ) இவர்கள் தவிர்த்த ஏனையோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கருதப்படுவர். மாநிலச் செயற்குழுவிற்கு அழைக்கப் படும்பொழுது இவர்கள் பங்கேற்பர். எந்த வாக்கெடுப்பிலும் இவர்கள் உரிமை கோர இயலாது.

உ) மாநிலப்பொறுப்பாளர்கள் உள்ளிட்ட மாநிலச்செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். தவிர்க்க இயலாத நிலையில் புதிய செயற்குழு பொறுப்பேற்க காலதாமதமாயின் தற்போதுள்ள செயற்குழுவே புதிய செயற்குழு பொறுப்பேற்கும்வரை தொடர்ந்து செயலாற்றும். இதற்கான ஒப்புதலை அடுத்து நடைபெறுகின்ற மாநிலச்செயற்குழுவில் பின்னேற்புப் பெறவேண்டும்.

ஊ) மாநில, மண்டல மற்றும் கிளைப் பொறுப்பாளர்கள் பணி ஓய்வு/விருப்பஓய்வு பெற்றுச் சென்றாலோ, கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் பயிலச் சென்றாலோ, பிறபணிகள்/ அயற்பணிகள் போன்றவற்றின் பொருட்டு பணிவிடுவிப்புச் செய்யப்பட்டாலோ அவர் வகிக்கும் பொறுப்பு காலிப்பணியிடமாகக் கருதப்படும். அக்காலிப்பணியிடம் ஒருமாதகால அவகாசத்திற்குள் தேர்தல் முறையில் நிரப்பப்பட வேண்டும்.

எ) மாநிலச்செயற்குழுவினது பணிகளாவன:

i) எல்லாக் கிளைகளையும் கட்டுப்படுத்துவதோடு அவற்றின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

ii) மாநில ஆட்சிக்குழுவிற்கு நெறிமுறைகளை வழங்குவதோடு வழி காட்டவும் செய்யும்.

iii) தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கையை மாநிலப் பொதுக்குழுவிற்கு அளிப்பதற்கு முன்னால் கூர்ந்தாராய்ந்து அனுமதியளிக்கும்.

iv) கழகத்தின் மாநிலப்பொதுக்குழுவில் நிறைவேற்றுவதற்காக எந்தவொரு கிளையாலும்

அல்லது உறுப்பினராலும் கொண்டு வரப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்கவும், திருத்தவும், தள்ளவும் செய்யும்.

v) மாநில அளவிலான மாநாட்டிற்கு ஏற்பாடுகளைச் செய்யும்.

vi) எந்தவொரு இனத்தின் பேரிலும் 50,000/-ரூபாய்க்கு மேற்பட்ட செலவினத்திற்கு முன் அனுமதி அல்லது பின் அனுமதி வழங்கும்.

vii) மாநில ஆட்சிக்குழுவால் உருவாக்கப்பட்ட வெவ்வேறு துணைக்குழுக்கள், குழுமங்கள் திறமையாகப் பணியாற்றுவதற்குரிய பணியளவு குறித்து, அமைப்பு விதிகளுக்கு முரண்படாத வகையில் விதிகளை உருவாக்கும்.

viii) மாநிலச்செயற்குழு தனது பணிகளைச் செயல்படுத்துவதற்காகக் குறைந்தது ஆண்டிற்கு நான்கு முறையாவது கூடும். அசாதாரண நேரம் தவிர மாநிலச்செயற்குழுவின் கூட்டம் பற்றிய அறிவிப்பு கூட்டநாளிற்கு 10 நாட்கள் முன்பாகக் கிளைகளுக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

ix) மாநிலச்செயற்குழுவின் கூட்டம், தேவைப்படும்போதோ அல்லது அதன் உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினரின் எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரிலோ பொதுச்செயலரால் தலைவரைக் கலந்து ஆலோசித்துக் கூட்டப்படும்.

x) மாநிலச்செயற்குழுவின் எந்தக் கூட்டத்திற்கும் குறைவெண்வரம்பு அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பாதிக்கு மேல் இருக்க வேண்டும்.

xi) மாநிலச்செயற்குழு, கழகத்திற்குத் தேவையான குறிப்பேடுகளையும் பதிவேடுகளையும் வரையறுக்கவும், அவை பொதுச்செயலராலும், பொருளராலும் முறைப்படி பராமரிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்க்கவும் செய்யும்.

xii) மாநிலச்செயற்குழு உறுப்பினர்கள் குடும்ப நல நிதி திட்டத்தின் பொதுக்குழு உறுப்பினர்களாக இருந்து செயல்படுவார்கள்.

**விதி 32. மாநிலப்பொதுக்குழு**

அ) கிளைகளின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கிளையின் உறுப்பினர் எண்ணிக்கைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலப்பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டல ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மற்றும் கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் மாநிலப் பொதுக்குழு உறுப்பினராவர்.

i) இவர்களைத் தவிர்த்த பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர்கள், கழகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில் நுட்பக்குழு அமைப்பாளர், மற்றும் கல்லூரி ஆசிரியர்குரல் முதன்மை பதிப்பாசிரியர், ஆகியோர் மாநிலப் பொதுக்குழுவின் சிறப்பு அழைப்பாளர்கள் ஆவர். இவர்களுக்கு வாக்குரிமை இல்லை.

ஆ) பொதுக்குழு, தமிழ் நாட்டிற்குள் மாநிலச்செயற்குழு குறிப்பிடும் ஏதேனும் ஓரிடத்தில் குறைந்தது ஆண்டுக்கொரு முறையோ அல்லது தேவைப்படும்போதோ பதினைந்து நாட்கள் முன்னறிவிப்புடன் மாநிலப் பொதுச்செயலரால் தலைவரைக் கலந்தாலோசித்துக் கூட்டப்படும்.

இ) சாதாரணமாகக் பொதுக்குழுக் கூட்டம் பற்றிய தகவல் பதினைந்து நாட்களுக்கு முன்னர் மாநிலப் பொதுச்செயலரால் மண்டலச் செயலர் மற்றும் கிளைச் செயலருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.. மண்டலச்செயலர் மண்டல ஆட்சிக்குழுவிற்கும் கிளைச் செயலரால் கிளை ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளையின் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

ஈ) பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவிருக்கும் இடம், காலம், முதலான தகவல்களோடு நிகழ்ச்சி நிரலையும், ஆற்றவிருக்கும்

பணிகள் பற்றிய தகவல்களையும், கூட்டம் நடைபெறுவதற்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னதாக விதி எண் 32(இ) இன் படி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும். ஆயினும் இத்தகு அறிவிப்புகள் கிடைக்கப் பெறவில்லை என்று காரணங்காட்டிக் கூட்டத்தின் நடைமுறைகளைச் செல்லாததாக்க முடியாது.

உ) பொதுக்குழு கூட்டக் குறைவெண் வரம்பு அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும். கூட்டத்தில் கொண்டு வரப்படும் எல்லா பொருட்களும் கூடி உள்ளோரில் வாக்களிக்கும் உரிமை உடையவர்களின் சாதாரண பெரும்பான்மை வாயிலாக முடிவு செய்யப்படும். பொதுக்குழு கூட்ட நாளன்று குறைவெண் வரம்பிற்கு குறைவான உறுப்பினர் பங்கேற்கும் நிலை ஏற்படின், அடுத்தக் கூட்டநாள் அன்றே முடிவு செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்படும். ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் நடைபெறும் கூட்டத்திற்குக் குறைவெண் வரம்பு எதுவும் கிடையாது.

ஊ) மாநிலச்செயற்குழு, தேவையென்று கருதும்போது பொதுக்குழுவின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டலாம்.

  i) பொதுக்குழுவின் கூட்டத்தைக் கூட்டக்கோரி பதினைந்து (15) விழுக்காட்டிற்குக் குறையாத பொதுக்குழு உறுப்பினர்கள் கையொப்பமிட்டு எழுத்து மூலமான வேண்டுதல் கொடுப்பின், பொதுச்செயலர் தலைவரைக் கலந்தாலோசித்துப் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

### விதி 33. மாநில ஆட்சிக்குழு

மாநிலத்தலைவர், துணைத்தலைவர்கள், பொதுச்செயலர், இணைச்செயலர்கள் மற்றும் பொருளர் ஆகியோர்களைக் கொண்டது மாநில ஆட்சிக் குழுவாகும். இவர்கள் மாநிலப்பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

### பிரிவு 1) தலைவர்

அ) தலைவரே கழகச் செயல்பாடுகளின் தலைமைப் பொறுப்பாளர் ஆவார்.

ஆ) கழகம் தொடர்பான அனைத்திலும் அவர் கலந்து ஆலோசிக்கப்படவும் அவரது அறிவுரை பெறப்படவும் வேண்டும்.

இ) மாநில அளவில் நடைபெறும் அனைத்துக் கூட்டங்களிலும் அவரே தலைமை வகிப்பார்.

ஈ) உடனடி நடவடிக்கை தேவைப்படும் அவசரச் சூழல்களில் தக்க செயல்பாடுகளைப் பொதுச்செயலருடன் கலந்து கொண்டு அவர் மேற்கொள்ளலாம். பின்பு, அச்செயல்பாடு குறித்து மாநிலச் செயற்குழுவின் பின்னேற்பினைப் பெறவேண்டும்.

உ) பொருளரிடம் உள்ள கணக்கு ஏடுகளை அவ்வப்போது கூர்ந்து ஆராயலாம்.

**பிரிவு 2) துணைத் தலைவர் (பொது)**

அ) தலைவர் இல்லாதபோது துணைத்தலைவர் (பொது) தலைவருக்குரிய அனைத்து அதிகாரங்களையும் கையாளவும், கடமைகளையும் நிறைவேற்றவும் செய்வார்.

ஆ) தலைவராலோ, ஆட்சிக்குழுவாலோ, மாநிலச்செயற்குழுவாலோ ஒப்படைக்கப்படும் மற்ற கடமைகளையும் நிறைவேற்றுவார்

**பிரிவு 3) துணைத் தலைவர் (மகளிர்)**

அ) தலைவர், மற்றும் துணைத்தலைவர் (பொது), இல்லாதபோது துணைத்தலைவர் (மகளிர்) தலைவருக்குரிய அனைத்து அதிகாரங்களையும் கையாளவும், கடமைகளையும் நிறைவேற்றவும் செய்வார்.

ஆ) தலைவராலோ, ஆட்சிக்குழுவாலோ, மாநிலச் செயற்குழுவாலோ ஒப்படைக்கப்படும் மற்ற கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**பிரிவு 4) பொதுச்செயலர்**

அ) பொதுச்செயலர் கழகத்தின் காப்பாளராவார்.

ஆ) பொதுச்செயலர் பெயராலேயே வழக்குத் தொடுக்கவும் வழக்குத் தொடுக்கப்படவும் வேண்டும்.

இ) கழகத்தின் அனைத்துக் கூட்டங்களின் நிகழ்பதிவுகளையும் வைத்திருப்பார்.

ஈ) அமைப்பு விதிகளுக்கு உட்பட்டும் ஏற்பவும் அவர் கடிதத் தொடர்புகளை மேற்கொள்வார்.

உ) அனைத்துக் கல்லூரிக்கிளைகளோடும், நெருக்கமான தொடர்புகளை வைத்துக் கொள்வதோடு, கழகத்தையும் அதன் உறுப்பினர்களையும் பாதிக்கக்கூடிய விவகாரங்களில் ஆலோசனை வழங்கவும், பெறவும் செய்வார். பணிகள் செம்மையாக நடைபெறுவதற்காக, சரியானது பொருத்தமானது என்று தாம் கருதும் வழிகாட்டுதல்களைக் கிளைகளுக்கு வழங்குவார். மாநிலஆட்சிக்குழு, செயற்குழு முடிவின் அடிப்படையிலும் அவசர மற்றும் அசாதாரணச் சூழல்களில் கிளைப் பொதுக்குழு, மண்டலச்செயற்குழுவைக் கூட்டுவார்.

ஊ) பல்வேறு பிரிவு உறுப்பினர்களின் நலன்கள் தொடர்பாக நெருக்கமாகக் கண்காணித்து வருவதோடு, மாநிலச்செயற்குழு, ஆட்சிக்குழு இயக்கும் வழியில் தலைவருடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்.

எ) மாநிலச்செயற்குழு, ஆட்சிக்குழு அல்லது தலைவருடன் கலந்து ஆலோசித்து உரிய இனங்களில் வேண்டுகோள்களையும், விளக்க முறையீடுகளையும் தயாரிப்பார்.

ஏ) வழக்கம் அல்லாத எல்லாவற்றிலும் தலைவர் அல்லது ஆட்சிக்குழுவைக் கலந்து கொண்டு முடிவு எடுப்பார்.

ஐ) உடனடி நடவடிக்கை தேவைப்படும் அவசரச் சூழல்களில் தலைவரையோ அல்லது ஆட்சிக்குழுவையோ கலந்து ஆலோசிக்க இயலாத நிலையில், தக்க செயல்பாடுகளை மேற்கொள்வதோடு, அடுத்து வரும் ஆட்சிக்குழு அல்லது மாநிலச் செயற்குழு அல்லது மாநிலப் பொதுக்குழுவின் பின்னேற்பினைப் பெறுவர்.

ஒ) பணம் பட்டுவாடா செய்யப்படுவதற்கு முன்னால், எல்லாப் பணபட்டிகளையும் கூர்ந்தாய்ந்து அனுமதி வழங்குவார்.

ஓ) ரூபாய் இருபதாயிரத்திற்கு (20,000/-) மேற்பட்ட செலவினங்களுக்கு ஆட்சிக்குழுவின் ஒப்புதலையும் ரூபாய்

ஐம்பதாயிரத்திற்கு (50,000/-) மேற்பட்ட செலவினங்களுக்கு மாநிலச் செயற்குழுவின் அனுமதி அல்லது பின்னேற்பினைப் பெறுவார்.

ஔ) கழகத்தின் சொத்துக்கள் பொதுச்செயலரின் பொறுப்பிலிருக்கும். அதற்கெனப் பொருள் இருப்புப் பதிவேடு ஒன்று பொதுச்செயலரால் பராமரிக்கப்பட வேண்டும். இப்பதிவேடு தலைவரால் சரி பார்க்கப்படும்.

ஃ) பொதுச்செயலர் ஆண்டுதோறும் கழகத்தின் அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அதனைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு முன், ஏற்பிற்காகச் சமர்ப்பிக்கப்பார்.

**பிரிவு 5) இணைச்செயலர் (பொது)**

அ) அதிகாரப்பூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு, பொதுச்செயலருக்குத் தேவைப்படும் போதெல்லாம் இணைச்செயலர் துணைபுரிவார்.

ஆ) பொதுச்செயலர் இல்லாதபோது அவரது எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துவதோடு அவரது அதிகாரபூர்வ கடமைகளையும் இணைச்செயலர் (பொது) நிறைவேற்றுவார்.

இ) தலைவரும், ஆட்சிக்குழுவும், மாநிலச் செயற்குழுவும் குறிப்பிடும் கடமைகளை அவர் நிறைவேற்றுவார்.

**பிரிவு 6) இணைச்செயலர் (மகளிர்)**

அ) பொதுச்செயலர் தன் அதிகாரப்பூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு, தேவை ஏற்படின் இணைச்செயலர் (மகளிர்) துணைபுரிவார்.

ஆ) பொதுச்செயலர் மற்றும் இணைச்செயலர் (பொது) இல்லாதபோது அவரது எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துவதோடு அவரது அதிகாரபூர்வ கடமைகளையும் இணைச்செயலர் (மகளிர்) நிறைவேற்றுவார்.

இ) தலைவரும், ஆட்சிக்குழுவும், மாநிலச் செயற்குழுவும் குறிப்பிடும் கடமைகளை அவர் நிறைவேற்றுவார்.

**பிரிவு 7) பொருளர்**

அ) மாநிலப்பொருளர், விதி எண் 28 இன் படி கழகத்தின் நிதி சார்ந்த நட்வடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

ஆ) பொருளர், கிளைகளிலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும், கழகத்திற்காகத் தொகைகளைப் பெற்றுக் கொள்வார். கிளைகளிலிருந்து உறுப்பினர் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களைப் பெறும் போது அதைச் செலுத்திய உறுப்பினர் பெயர்ப் பட்டியலையும் கேட்டுப் பெறுவார்.

இ) பெற்றுக் கொள்ளும் எல்லாத் தொகைகளுக்கும் உடனுக்குடன் பற்றுச்சீட்டு வழங்குவார்.

ஈ) கழகத்திற்காகவும், கழகத்தின் சார்பிலும், பணப்பட்டுவாடா செய்வார்.

உ) கழகத்தின் மதிப்பு வாய்ந்த பண ஆவணங்களும், கணக்குப் பதிவேடுகளும் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்குப் பொறுப்பாளராவார்.

ஊ) பணம் பெறப்படும் போதெல்லாம் உடனடியாக வங்கியில் செலுத்தப்பட வேண்டும்.

எ) மாநிலப்பொருளர் தன் வசம் ரூபாய் இருபதாயிரத்தைத் (ரூ.20,000/-) தொகையாக வைத்துக் கொள்ளலாம். மேலும் செலவிற்குத் தேவைப்படும் தொகையினை அவ்வபோது வங்கியில் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். பத்தாயிரம் (10,000/-) ரூபாய்க்கு மேற்பட்ட செலவினங்களுக்கு வங்கி காசோலையாகவே அளித்திடல் வேண்டும்.

ஏ) வழக்கமான செலவுகளுக்காக நிரந்தர முன்பணமாக ரூபாய் இருபதாயிரத்தை(ரூ.20,000/-), பொதுச்செயலருக்கு முன்தொகையாக பொருளர் அளித்திடலாம். இத்தொகைக்கான பற்றுச்சீட்டு அளிக்கப்பட்ட பின்னர் மறு முன்தொகை அளிக்கப்பட வேண்டும்.

ஐ) பயணப்படி, நாள்படி இதர செலவுகளுக்காக ஏனைய மாநிலப் பொறுப்பாளர்களுக்கும் முன்தொகை வழங்கலாம். கழகப் பொறுப்பாளர்கள் தவிர்த்த பிறருக்கு முன் தொகை வழங்கப்படுவதாயின் ஆட்சிக்குழு ஒப்புதல் பெறவேண்டும்.

ஒ) பொருளர் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாத இறுதிக்குள் முந்தைய அலுவல் ஆண்டின் வரவு, செலவு கணக்கினைத் தணிக்கை செய்து அவ்வறிக்கையினை அடுத்து நடைபெறும் செயற்குழுவின் ஒப்புதலுக்காக வைத்திட வேண்டும். அசாரதாரன சூழ்நிலையின் காரணமாகத் தணிக்கை செய்த கணக்குகளை மாநிலச் செயற்குழுவில் வைப்பதற்கு காலதாமதம் ஏற்படுமாயின் செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் நடைபெறும் மாநிலச் செயற்குழுவின் ஒப்புதலுக்கு வைத்திடல் வேண்டும். செப்டம்பர் இறுதிக்குள் முறையான கணக்குகளைச் செயற்குழுவில் ஒப்படைக்காத பொருளர் மீது மாநிலச் செயற்குழு தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**விதி 34. பொதுவானவை**

அ) மாநிலப் பொதுக்குழு, மாநிலச் செயற்குழு, மாநில ஆட்சிக்குழு ஆகியவற்றின் அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைவர், அவர் வராதபோது துணைத்தலைவர் (பொது), அவரும் வராத நிலையில் துணைத்தலைவர் (மகளிர்), மூவரும் வராதபோது கூடியுள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அவர்களில் ஒருவர், தலைமையேற்பர்.

ஆ) எந்தக் கூட்டத்திலும் கொண்டுவரப்படும் எல்லாப்பொருள்களும் கூடியுள்ளோரில் வாக்களிக்கும் உரிமையுடையோரின் சாதாரண பெரும்பான்மை வாயிலாக முடிவு எடுக்கப்படும். எந்தவொரு கூட்டத்திலும் ஒருவருக்குப் பதிலாக மற்றவர் வாக்கு அளிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. எந்தவொரு கூட்டத்திலும் தேர்தல் தவிர வேறொரு பொருளில் சமஎண்ணிக்கையில் வாக்குகள் அமையுமாயின் முடிவு கட்டும் வாக்கினை அளிக்கத் தலைவருக்கு உரிமையுண்டு.

இ) எந்தவொரு கூட்டத்திலும் உறுப்பினர்கள் முறையாக அறிவிப்பு கொடுத்துக் கொண்டு வரும் தீர்மானங்கள் அவர்கள் முன்மொழிய அனுமதிக்கவேண்டும் அல்லது அதற்கான காரணங்களுடன் அனுமதி மறுக்கப்பட வேண்டும்.

ஈ) மாநிலச் செயற்குழு மற்றும் மாநிலப் பொதுக்குழு உள்ளிட்ட எந்தவொரு கூட்டத்திலும் உறுப்பினர்களால் ஒத்திவைப்பு/

கவன ஈர்ப்பு தீர்மானங்கள் முன்மொழிய அனுமதிக்கவேண்டும். இத்தகைய தீர்மானங்கள் முறையே மண்டலச்செயற்குழு/ பொதுக்குழு, கிளைப்பொதுக்குழு ஆகியவற்றில் முறைப்படி நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். இருப்பினும் உரிய காரணங்களின் அடிப்படையில் அனுமதி மறுக்கப்படலாம்.

(உ) கிளை, மண்டல. மாநில ஆட்சிக்குழுவிற்கான தேர்தல் அறிவிக்கும் செயற்குழு/பொதுக்குழுவில் அந்நாள் வரையிலான வரவுசெலவு அறிக்கையினைத் தொடர்புடைய ஆட்சிக்குழு வழங்கவேண்டும். பதவிக்காலம் முடிந்த ஏழு (07) நாட்களுக்குள் அனைத்து ஆவணங்களுடன் வரவுசெலவு அறிக்கையினைப் புதிய ஆட்சிக்குழுவிடம் வழங்கிட வேண்டும். தவறும் பட்சத்தில் தொடர்புடைய ஆட்சிக்குழுவின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**விதி 35. மண்டல மேலாண்மை**

**பிரிவு 1) மண்டலங்கள்**

கழகம் ஒன்பது மண்டலங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு மண்டலமும் கீழ்க்கண்ட மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைத் தனது மண்டலக் கிளைகளாகக் கொண்டுச் செயல்படும்.

**மண்டலம் 1. சென்னை மண்டலம் :**

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்

**மண்டலம் 2. வேலூர் மண்டலம் :**

திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்கள்

**மண்டலம் 3. கடலூர் மண்டலம் :**

விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள்

**மண்டலம் 4. தஞ்சை மண்டலம் :**

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள்

**மண்டலம் 5 திருச்சி மண்டலம் :**

திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், அரியலூர் மாவட்டங்கள்

**மண்டலம் 6 சேலம் மண்டலம் :**

சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி மாவட்டங்கள்

**மண்டலம் 7 கோவை மண்டலம் :**

கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்கள்

**மண்டலம் 8 மதுரை மண்டலம் :**

மதுரை, திண்டுக்கல் திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, தேனி மாவட்டங்கள்.

**மண்டலம் 9 சிவகங்கை மண்டலம் :**

இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள்.

அரசால் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு உருவாக்கப்படும் புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படாத மாவட்டம் இருந்த மண்டலத்தில் தொடர்ந்து வைக்கப்படும்.

**பிரிவு 2) மண்டல ஆட்சிக்குழு**

அ) மண்டலத்தலைவர், துணைத்தலைவர், மண்டலச்செயலர், மண்டல இணைச்செயலர், மண்டலப் பொருளர் ஆகியோர் அடங்கியது மண்டல ஆட்சிக் குழுவாகும்.

ஆ) மாநிலக் கழகத்திற்கும் கிளைகளுக்கும் இடையில் இணைப்புப் பாலமாக மண்டலங்கள் செயல்படும். பொறுப்பாளர்கள் உட்பட மண்டலப் பொதுக்குழு உறுப்பினர்கள் இரண்டாண்டு காலத்திற்குப் பொறுப்பிலிருப்பார்கள்.

**பிரிவு 3) மண்டலச்செயற்குழு**

அ) மண்டல ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மண்டலத்தில் உள்ள கிளைகளின் தலைவர்கள், செயலர்கள், பொருளர்கள், ஆகியோரைக் கொண்டது மண்டலச் செயற்குழுவாகும்.

i) இவர்களோடு அம்மண்டலத்தில் உள்ள மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள். பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர்கள், கழகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு

உறுப்பினர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில் நுட்பக்குழு அமைப்பாளர், மற்றும் கல்லூரி ஆசிரியர் குரல் முதன்மை பதிப்பாசிரியர், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக மண்டலச் செயற்குழுவில் இடம் பெறுவர். இவர்களுக்கு வாக்குரிமை இல்லை.

ஆ) மண்டலச் செயற்குழு குறைந்தது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது தேவைப்படும் பொழுதோ கூடி அதன் முன் வைக்கப்படும் பொருள்களை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும். மண்டலச் செயற்குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் குறைவெண் வரம்பு அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் (3) ஒரு (1) பங்காகும். கூட்டத்தில் கொண்டு வரப்படும் எல்லாப் பொருள்களும் கூடியுள்ளோரில் வாக்களிக்கும் உரிமை உடையவர்களின் சாதாரண பெரும்பான்மை வாயிலாக முடிவெடுக்கப்படும்.

இ) பல்கலைக்கழகப் பொறுப்புகளான பேரவை உறுப்பினர், ஆட்சிக்குழு உறுப்பினர், கல்விக்குழு உறுப்பினர், போன்றவற்றிக்கும், பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழு பொறுப்புகளுக்கும், உறுப்பினர்கள் நியமனம் செய்வது தொடர்பாக மண்டலச் செயற்குழு நெறிமுறைகளுக்கு உட்பட்டு முறையான முடிவுகளை மேற்கொள்ளும். இது தொடர்பான உரிய வழிகாட்டுதலை மாநில ஆட்சிக்குழு வழங்கும்.

**பிரிவு 4) மண்டலப்பொதுக்குழு**

அ) மண்டல ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மண்டலத்தில் உள்ள கிளைகளின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைகளின் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கொண்டது மண்டலப் பொதுக்குழுவாகும்.

i) இவர்களோடு அம்மண்டலத்தில் உள்ள மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள். பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர்கள், கழகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு

உறுப்பினர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில் நுட்பக்குழு அமைப்பாளர், மற்றும் கல்லூரி ஆசிரியர்குரல் முதன்மை பதிப்பாசிரியர், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக மண்டலப் பொதுக்குழுவில் இடம் பெறுவர். இவர்களுக்கு வாக்குரிமை இல்லை.

ஆ) மண்டலப் பொதுக்குழு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் கூடும். இக்கூட்டத்தில் கடந்த அலுவல் ஆண்டில் உள்தணிக்கை செய்யப்பட்ட வரவு - செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும். மண்டலக் கருத்தரங்கு, பயிற்சி முகாம், மாநில மாநாடு போன்றவற்றை நடத்திடுவதற்குத் தேவையான போது பொதுக்குழு கூடி ஒப்புதல் / பின்னேற்பு வழங்கும்.

## மண்டலப் பொறுப்பாளர்கள்

**பிரிவு 5) மண்டலத்தலைவர்**

அ) மண்டலத்தலைவர் எல்லா மண்டல ஆட்சிக்குழு, மண்டல செயற்குழு, மண்டலப் பொதுக்குழு மற்றும் மண்டல அளவிலான இதர கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பார்.

ஆ) மாநிலக்கழகத்தின் கட்டளை அல்லது குறிப்பிட்ட பணிகளைச் செயல்படுத்துவார்.

இ) மண்டலத்திற்குள் எழும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு அதனை மாநிலக் கழகத்திற்கும் அறிவிப்பார்.

**பிரிவு 6) மண்டலத்துணைத்தலைவர்**

அ) மண்டலத் தலைவர் இல்லாதபோது மண்டலத் துணைத்தலைவர், மண்டலத் தலைவருக்குரிய அனைத்து அதிகாரங்களையும் கையாளவும், கடமைகளையும் நிறைவேற்றவும் செய்வார்.

ஆ) மண்டலத்தலைவராலோ, மண்டலத் ஆட்சிக்குழுவாலோ, மண்டலச்செயற்குழுவாலோ ஒப்படைக்கப்படும் மற்ற கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**பிரிவு 7) மண்டலச்செயலர்**

அ) மண்டல ஆட்சிக்குழு, மண்டலச்செயற்குழு, மண்டலப் பொதுக்குழுக்கூட்டங்களை, மண்டலத்தலைவரை ஆலோசித்துக் கூட்டுவார்.

ஆ) மண்டல ஆட்சிக்குழு, மண்டலச்செயற்குழு, மண்டலப் பொதுக்குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பதிவு செய்வார். அதனைச் சுற்றுக்கு விடுவார். மேலும் மண்டலச் செயற்குழு, மண்டலப் பொதுக்குழுக் கூட்டங்களின் முடிவுகளை, பொதுச்செயலருக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

இ) தேவைப்படும்போது மாநிலக்கழகத்தின் அறிக்கைகள் அல்லது தகவல்களை மண்டலத்தில் உள்ள பல்வேறு கிளைகளுக்கு அனுப்புவார். மண்டலத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளில் நிகழ்வு நடந்த அன்றைய தினமே பொதுச்செயலருக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

ஈ) ஆண்டு அறிக்கையினைத் தயாரித்து மண்டலப்பொதுக்குழுவில் வைப்பார். இவ்வறிக்கையினை மாநிலப்பொதுச்செயலருக்கு அனுப்பி வைப்பார்.

உ) ரூபாய் ஐந்தாயிரத்திற்கு (5,000/-) மேற்பட்ட அனைத்துச்செலவினங்களை, மண்டல ஆட்சிக்குழுவின் அனுமதியை முன்கூட்டியோ/பின்னேற்புப் பெற்றோ செய்வார்.

ஊ) எல்லாக் கிளைகளோடும் அவர் நெருக்கமாகத் தொடர்புகள் வைத்திருப்பார். கழகம் மற்றும் உறுப்பினர்களைப் பாதிக்கும் அனைத்திலும் ஆலோசனை வழங்கவும் பெறவும் செய்வார். மண்டலத்திலும், மாநிலத்திலும் எடுக்கப்படும் முடிவுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

எ) உடனடி நடவடிக்கை தேவைப்படும் அவசர காலத்திலும், தலைவரையும் மண்டல ஆட்சிக்குழுவையும் கலந்து ஆலோசிக்க இயலாத போதும்,அந்தச் சூழலுக்கு ஏற்ற நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார். அதற்கான பின்னேற்பினை அடுத்த ஆட்சிக்குழுக் கூட்டத்தில் பெற்றுக் கொள்வார்.

ஏ) முடிந்த செலவினங்கள் குறித்த பணப்பட்டிகளைக் கூர்ந்தாய்ந்து அனுமதி வழங்குவார்.

**பிரிவு 8) மண்டல இணைச்செயலர்**

அ) மண்டலச்செயலர் இல்லாதபோது அவரது எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துவதோடு அவரது அதிகாரபூர்வ கடமைகளையும் மண்டல இணைச்செயலர் நிறைவேற்றுவார்.

ஆ) மண்டலத்தலைவரும், மண்டல ஆட்சிக்குழு, செயற்குழு, பொதுக்குழு குறிப்பிடும் கடமைகளை அவர் நிறைவேற்றுவார்.

**பிரிவு 9) மண்டலப் பொருளர்**

அ) மண்டலப்பொருளர், விதி எண் 28 இன் படி கழகத்தின் நிதி சார்ந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

ஆ) மண்டலப்பொருளர் மண்டலக் கழகத்தின் எல்லா வரவு, செலவுகளுக்கும் கணக்கு வைத்திருப்பார்.

இ) கிளைகளிலிருந்து ஆண்டுக்கட்டணம் செலுத்திய உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலையும் கேட்டுப் பெறுவார்.

ஈ) மண்டலக்குழுவிற்காகவும், அதன் சார்பிலும் பணப்பட்டுவாடா செய்வார்.

உ) மண்டலத்தின் ஆண்டு வரவு, செலவு கணக்கைத் தயாரித்து, அதனை மண்டலச் செயற்குழுவால் அமைக்கப்பட்ட மூவர்குழுவின் மூலம் தணிக்கை செய்து. அவ்வறிக்கையினைக் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் மண்டலப்பொதுக்குழுவில் சமர்ப்பித்து ஒப்புதலைப் பெறுவார்.

**விதி 36. கல்லூரிக்கிளை மேலாண்மை**

**பிரிவு 1) கிளைச்செயற்குழு**

அ) கல்லூரிக்கிளையின் செயல்பாடுகள் அக்கிளையின் செயற்குழுவால் இயக்கப்படும். கிளையின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் உள்ள துறைகள் தவிர்த்துப் பிற பாடத்துறைகள் ஒவ்வொன்றுக்கும்

கிளைப் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள், ஆகியோர்களைக் கொண்டது கிளையின் செயற்குழுவாகும்.

i) இவர்களோடு அக்கிளையில் உள்ள மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மண்டல ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஆட்சிக்குழு/ ஆட்சிப்பேரவை/கல்விக்குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில் நுட்பக்குழு அமைப்பாளர் மற்றும் கல்லூரி ஆசிரியர்குரல் முதன்மைப் பதிப்பாசிரியர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக, கிளைச்செயற்குழுவில் இடம் பெறுவர். இவர்களுக்கு வாக்குரிமை இல்லை.

ஆ) கிளை ஆட்சிக்குழுவினர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும். ஆயினும் புதிய பொறுப்பாளர்கள் பதவி ஏற்கும் வரை இவர்கள் தொடர்ந்து பணியாற்றிடலாம்.

இ) பதவிக்காலம் நிறைவுற்ற பொறுப்பாளர்களும் பொதுக்குழு உறுப்பினர்களும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதி உடையோர் ஆவர். இவ்விதிப்படி மறுதேர்தலில் போட்டியிடும் உரிமை, அமைப்பு விதிகள் 38 (அ), (ஆ) மற்றும் 47 (பிரிவு 2) ஆகியவற்றிக்குக் கட்டுப்பட்டதாகும்.

ஈ) கிளையின் செயற்குழுவில் ஆண்டின் இடையில் ஏற்படும் காலியிடங்கள் கிளைப் பொதுக்குழுவால் தேர்தல் வாயிலாக ஒரு மாத காலத்திற்குள் நிரப்பப்படவேண்டும்.

உ) கிளைச்செயற்குழு குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒருமுறை கூடும். கிளைச் செயற்குழுக் கூட்டத்தைக் கிளைத் தலைவருடன் கலந்தாலோசித்துக் கிளைச் செயலர் கூட்டுவார்.

ஊ) உறுப்பினர் சேர்த்தல், உறுப்பினர் கட்டணம் வசூலித்தல் போன்ற கழகம் தொடர்புடைய செயல்களில் கிளைச் செயலருக்கு ஒத்துழைப்பு நல்கும்.

எ) கிளை உறுப்பினர்கள் அளிக்கும் புகார்கள் மற்றும் விண்ணப்பங்களை விழிப்புடன் அலசி ஆராய்ந்து அவற்றின் மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஏ) மாநிலக்கழகத்திற்கும், மண்டலத்திற்கும், கிளை உறுப்பினர்களுக்கும் இடையில் தகவல் தொடர்பு அமைப்பாகச் செயல்படும். கழகத்தின் வேலைகளையும், நடவடிக்கைகளையும், உறுப்பினர்கள் அறிந்து கொள்ளச் செய்யும். தேவைப்படும் போதெல்லாம் மாநிலச் செயற்குழுவிற்கும், மண்டலத்திற்கும் பரிந்துரைகளை வழங்கும்.

ஐ) கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் ஆண்டு அறிக்கையினையும் பொதுக்குழுவின் முன் வைக்கும்.

**பிரிவு 2) கிளைப்பொதுக்குழு**

அ) கிளையின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்டது கிளைப் பொதுக்குழுவாகும்.

ஆ) கிளையின் பொதுக்குழு குறைந்தது இரண்டு மாதத்திற்கொரு முறை அல்லது தேவைப்படும் போதெல்லாம் கூடும். கிளைத் தலைவருடன் கலந்தாலோசித்து இக்கூட்டத்தைக் கிளைச்செயலர் கூட்டுவார்.

இ) செயற்குழுவால் முன் வைக்கப்பட்டுள்ள கிளைக் கணக்குகளின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையினையும், ஆண்டறிக்கையும் அனுமதித்து ஏற்கும்.

ஈ) மண்டல மாநாட்டை நடத்துவதற்கு மண்டலக்குழுவிற்குத் துணை புரியும்.

உ) அமைப்பு விதிகளில் 38(அ), (ஆ) மற்றும் 47 (பிரிவு 2) ஆகியவற்றை நிறைவு செய்கின்ற எந்தவொரு உறுப்பினருக்கும் தடையின்றி கிளை,மண்டல மற்றும் மாநிலத் தேர்தலில் பங்கேற்கச் சான்றிதழ் வழங்கிடும்.

ஊ) கிளைப் பொதுக்குழுவின் எந்தக் கூட்டத்திற்கும் குறைவெண் வரம்பு அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில்

ஒரு பங்காகும். கூட்டத்தில் கொண்டு வரப்படும் எல்லாப் பொருள்களும் கூடியுள்ளோரில் வாக்களிக்கும் உரிமை உடையவர்களில் சாதாரணப் பெரும்பான்மை வாயிலாக முடிவு எடுக்கப்படும்.

**பிரிவு 3) கிளை ஆட்சிக்குழு**

அ) கிளையின் தலைவர், துணைத்தலைவர், செயலர், இணைச்செயலர் மற்றும் பொருளர் ஆகியோரைக் கொண்டது கிளை ஆட்சிக்குழுவாகும்.

**பிரிவு 4) கிளைத்தலைவர்**

அ) கிளையின் தலைவர், கிளைச்செயல்பாடுகளின் தலைமைப் பொறுப்பாளர் ஆவார்.

ஆ) கிளைக் கழகம் தொடர்பான எல்லா செயல்பாடுகளிலும் அவர் கலந்து ஆலோசிக்கப்படவும் அவரது அறிவுரை பெறப்படவும் வேண்டும்.

இ) அவரது கடமைகள் மாநில, மண்டலத்தலைவரின் கடமைகளோடு ஒத்த இயல்புடையன.

**பிரிவு 5) கிளைத்துணைத்தலைவர்**

அ) தலைவர் இல்லாத போது அவரது கடமைகளைத் துணைத்தலைவர் நிறைவேற்றுவார்.

**பிரிவு 6) கிளைச்செயலர்**

அ) கிளைச்செயலர், கிளை உறுப்பினர்களிடமிருந்து உறுப்பினர் கட்டணத்தையும் பிற நிலுவைகளையும் வசூலிப்பதில் பொருளருக்குத் துணைபுரிவதோடு அவ்வாறு நிலுவை விழுவதைத் தடுக்கும் பணியிலும் ஈடுபடுவார்.

ஆ) உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தில் உள்ளபடி பெயர், முகவரி, பணிநிலை, கல்வித்தகுதி ஆகியவற்றைக் காட்டும் உறுப்பினர் பதிவேட்டைப் பராமரிப்பார்.

இ) உறுப்பினர் விண்ணப்பத்தின் இரண்டாம் படியினைக் கழகப்பொதுச்செயலருக்கு அனுப்பி வைப்பார்.

ஈ) கூட்டக் குறிப்பேட்டில் கூட்டங்களின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வார்.

உ) மாநில, மண்டல மற்றும் கிளைக் கழகம் வரையறுக்கும் குறிப்பேடுகளையும், பதிவேடுகளையும் பராமரிப்பார்.

ஊ) முடிந்த செலவினங்கள் குறித்த பணப்பட்டிகளை அனுமதிப்பார்.

எ) பின்னர் ஈடுசெய்யப்படக்கூடிய சிறிய சாதாரண செலவினங்களுக்காக முன்பணமாக ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறை (2,500/-) பெற்றிருப்பார்.

ஏ) ஆட்சிக்குழுவின் அனுமதியோடு மட்டுமே ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூற்று (2500/-) க்கு மேற்பட்ட செலவினங்களைச் செய்வார்.

ஐ) செயற்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களின் தணிக்கைக்காக, அலுவல் ஆண்டுகளின் கணக்குகளை வைப்பதற்குப் பொருளரோடு ஒத்துழைப்புத் தருவார். அத்தணிக்கை அறிக்கையைப் பொருளரோடு சேர்ந்து, பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு வைப்பார்.

ஒ) அந்த அலுவல் ஆண்டில் கிளையின் செயற்பாடு குறித்து ஓர் அறிக்கையைத் தயார் செய்து கிளைச் செயற்குழுவின் ஒப்புதலுக்காகத் தாக்கல் செய்வார். பின்பு அதனைக் கிளைப் பொதுக்குழுவின் கூட்டத்திலும் ஏற்பிற்காக வைப்பார்.

ஓ) ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாதத்தில் அதற்கு முந்தைய அலுவல் ஆண்டின் வரவு-செலவு அறிக்கை, ஆண்டறிக்கை, அந்நாளில் கிளையில் இருக்கும் உறுப்பினர்களின் பட்டியல் ஆகியவற்றை மண்டலச் செயலர் மற்றும் பொதுச்செயலருக்கு அனுப்பி வைப்பார்.

ஔ) கிளை உறுப்பினர்களின் எந்தவொரு முறையீடும், கிளைச்செயலர் மூலம் அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத முறையீடுகள் ஏற்கப்படாது. கொடுக்கப்பட்ட முறையீடுகள் கிளைச் செயலரால் ஒருவார காலத்திற்குள் அனுப்பப்பட வேண்டும்.

**பிரிவு 7) இணைச்செயலர்**

அ) கிளைச்செயலர் இல்லாதபோது அவரது எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துவதோடு அவரது அதிகாரபூர்வ கடமைகளையும் கிளை இணைச்செயலர் நிறைவேற்றுவார்.

ஆ) கிளைத்தலைவரும், கிளை ஆட்சிக்குழுவும், கிளைச் செயற்குழுவும் குறிப்பிடும் கடமைகளை அவர் நிறைவேற்றுவார்.

**பிரிவு 8) கிளைப்பொருளர்**

அ) கிளைப்பொருளர் விதி எண் 28 இன் படி கழகத்தின் நிதி சார்ந்த நட்வடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

ஆ) கிளை உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய எல்லாத் தொகைகளையும் வசூலிப்பார். வசூலித்த தொகை அனைத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்குவார்.

இ) வசூலித்த தொகை முழுவதையும் வங்கியில் உள்ள கணக்கில் சேமித்து வைப்பார்.

ஈ) கணக்குப் பதிவேட்டையும், செலவிற்கான பற்றுச்சீட்டுகளையும் பராமரிப்பார்.

உ) உரிய காலத்தில் மண்டலக்குழுவிற்கும், மாநில அமைப்பிற்கும் செலுத்த வேண்டிய பணத்தை அனுப்புவார்.

ஊ) கிளையின் ஆண்டுக் கணக்கைத் தயாரித்து தணிக்கைக் குழுவிற்கு வைத்துத் தணிக்கை செய்யப்பட்டக் கணக்கைக் கிளையின் பொதுக்குழுவில் வைப்பதே இவரது முக்கிய பொறுப்பாகும்.

**விதி 37. உயர்மட்டக்குழு**

அ) உயர்மட்டக்குழு என்பது மாநில ஆட்சிக்குழு, மண்டலத்தலைவர், மண்டலச்செயலர், கூட்டு நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள், ஆகியோரைக் கொண்டதாகும்.

i) கழகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், அய்பெக்டோ பொறுப்பாளர், கட்டடப் பராமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும்

தொழில்நுட்பக்குழு அமைப்பாளர் மற்றும் கல்லூரி ஆசிரியர் குரல் முதன்மை பதிப்பாசிரியர், ஆகியோர்களைச் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்க ஆட்சிக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

ஆ) உயர்மட்டக்குழு, மாநிலச்செயற்குழு மற்றும் கிளைக் கழகங்களுக்கிடையே இணைப்புப் பாலமாகச் செயல்படும்.

இ) உயர்மட்டக்குழு மாநிலச் செயற்குழு எடுக்கும் முடிவுகளை அமல்படுத்துவதில் களப்பணியாற்றும்.

ஈ) மாநிலச் செயற்குழு முடிவுகளை மாநிலம் முழுவதும் சீரான முறையில் அமல்படுத்துவதற்கு அவ்வப்போது கூடி வழிகாட்டுதல்களை வழங்கும்.

**விதி 38. கழகப்பொறுப்புகள்**

அ) கழகத்தில் ஒரு உறுப்பினர் ஒரு சமயத்தில் ஒன்றுக்குமேற்பட்ட கிளை அல்லது மண்டல அல்லது மாநிலப் பொறுப்புகளில் இருக்க முடியாது. இவை தவிர பல்கலைக்கழகப் பொறுப்பு, கூட்டமைப்பு பொறுப்பு போன்றவற்றில் கூடுதலாகப் பொறுப்பு வகிப்பதை இவ்விதி கட்டுப்படுத்தாது.

ஆ) கிளை, மண்டல மற்றும் மாநிலப் பொறுப்புகளில், எந்த ஒரே பதவியிலும் ஒருவர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் இருந்திட முடியாது. இரண்டு முறை இருந்திட்ட பதவி தவிர்த்து பிற பதவிகளில் போட்டியிடுவதற்கோ, தேர்ந்தெடுப்பதற்கோ இவ்விதி தடையாக இருக்காது.

**விதி 39. நம்பிக்கையில்லாத் தீர்மானம்**

அ) மாநில ஆட்சிக்குழு, மண்டல ஆட்சிக்குழு, கிளை ஆட்சிக் குழுவில் உள்ள எந்த ஒரு பொறுப்பாளர் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

i) தொடர்புடைய அமைப்பின் தேர்தல் முடிந்த ஆறு மாதங்களுக்குப் பிறகே குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தொடர்புடைய பொதுக்குழுவின் உறுப்பினர்களில் பதினைந்து (15) விழுக்காடுக்கும் குறையாத உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கூடிய

கடிதத்தைத் தொடர்புடைய மாநில, மண்டல, கிளைத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

ii) தலைவர், தொடர்புடைய பொறுப்பாளருக்கு நேரில் / பதிவஞ்சல் மூலம் தகவல் தருதல் வேண்டும்.

iii) தகவல் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து பதினைந்து (15) நாட்கள் அவகாசத்துடன் முப்பது (30) நாட்களுக்குள்ளாகக் கூட்டப்படும் தொடர்புடைய மாநில, மண்டல, கிளையின் பொதுக்குழுவில், விவாதத்திற்குப் பிறகு மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றலாம்.

iv) மேற்காண் பொதுக்குழுவிற்கு குறைவெண் வரம்பு பொதுக்குழுவின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் ஐம்பத்தொன்று (51) விழுக்காடு ஆகும்.

v) நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தொடர்புடைய பொறுப்பாளர் தமது பொறுப்பை உடனே இழப்பார்.

vi) நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்புடைய கடிதத்தைக் கழகத்தின் மாநில, மண்டலச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

vii) ஒரு பொறுப்பாளர் மீது கொண்டு வரப்படும் இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கும் இடையில் குறைந்தது ஆறு மாத கால இடைவெளி இருக்க வேண்டும்.

ஆ) மாநில/மண்டல/கிளைத்தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால், அத்தீர்மானத்தைத் தலைவர் இடத்திலிருந்து மேற்கூறிய விதிகளின்படி செயல்படுத்தும் உரிமை மாநில/ மண்டல/கிளை ஆட்சிக்குழுவிற்கு உண்டு. மேற்படி தீர்மானம் மண்டலச்செயலர், பொதுச்செயலருக்கு அனுப்பப்பட வேண்டும். மாநில/ மண்டல/கிளை ஆட்சிக்குழுவின் வழிகாட்டுதலின்படி மாநிலத்துணைத் தலைவர் (பொது)/ மண்டல/கிளைத் துணைத்தலைவர் இந்நடவடிக்கைகளை நிறைவேற்றுவார்.

**விதி 40. ஒழுங்கு நடவடிக்கை**

**பிரிவு 1) ஒழுங்கு நடவடிக்கை என்பது**

அ) ஒரு உறுப்பினருக்கு எச்சரிக்கை விடுத்தல்

ஆ) ஒரு உறுப்பினரைத் தற்காலிகமாக நீக்குதல்

இ) ஒரு உறுப்பினரின் வாக்குரிமையை தற்காலிகமாக இரத்து செய்தல்

ஈ) ஒரு உறுப்பினரை நிரந்தரமாக நீக்குதல்

உ) கிளையைக் கலைத்து விடுதல்

ஆகியனவாகும்.

**பிரிவு 2) உறுப்பினர் மீதான நடவடிக்கை**

அ) கிளைப்பொதுக்குழு, மண்டலச்செயற்குழு, மாநில ஆட்சிக்குழு, மாநிலச்செயற்குழு ஆகியவற்றின் முடிவுகளுக்குக் கட்டுப்படாமலும், அவை அறிவுறுத்திய செயல்பாடுகளில் பங்கேற்க மறுப்பதும், அமைப்பு விதிகளுக்குப் புறம்பாகவும், கழக நலன்களுக்கு எதிராகவும் ஓர் உறுப்பினர் செயல்படுவாரேயானால், அவர்மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்கக் கிளைப்பொதுக்குழு, மண்டலச்செயற்குழு, மாநில ஆட்சிக்குழு ஆகியவற்றிக்கு அதிகாரமுண்டு.

ஆ) கிளையின் பொதுக்குழு ஓர் உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்க முடியும். ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமுன், கிளைச்செயலர் தொடர்புடைய உறுப்பினரிடம் ஏழு (7) நாட்கள் அவகாசத்துடன் உரிய விளக்கம் கேட்டு, அவ்விளக்கத்தினைக் கிளைப்பொதுக்குழுவில் வைத்து விவாதித்து முடிவெடுக்க வேண்டும். அவ்வுறுப்பினரால் விளக்கம் எதுவும் கொடுக்கப்பட்டிருக்க வில்லையெனில், விளக்கம் தருவதற்கு எதுவுமில்லை எனக் கருதி பொதுக்குழு தாமாகவே முடிவெடுக்கலாம்.

இந்த நடவடிக்கையைக் கிளைச்செயலர், தொடர்புடைய உறுப்பினர், மண்டலச் செயலர் மற்றும் மாநிலப் பொதுச்செயலருக்குக்

தெரிவிக்கவேண்டும். தொடர்புடைய உறுப்பினர், இந்த நடவடிக்கை தொடர்பாக மாநிலப் பொதுச்செயலருக்கு மேல்முறையீடு செய்யலாம். பொதுச்செயலர், இந்த முறையீட்டை அடுத்து வரும் மாநிலச் செயற்குழுவில் வைத்து முடிவெடுக்கலாம். மாநிலச் செயற்குழுவின் முடிவே இறுதியானது.

இ) ஒரு உறுப்பினரின் நடவடிக்கைகள் கழகத்தின் மண்டலச் செயல்பாடுகளுக்கு இடையூராகவும், அமைப்பு விதிகளுக்கு முரணாகவும் இருக்கும்போது அவர்மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்க மண்டல ஆட்சிக்குழுவின் முடிவின் படி மண்டலச் செயலர் தொடர்புடைய உறுப்பினர் சார்ந்த கிளைக்கழகத்திற்கு அறிவுறுத்தலாம். கிளைக்கழகம் விதி எண் 40 பிரிவு 2-ஆ இல் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பயன்படுத்தி அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈ) ஒரு உறுப்பினரின் நடவடிக்கைகள் கழகத்தின் மாநிலச் செயல்பாடுகளுக்கு இடையூராகவும், அமைப்பு விதிகளுக்கு முரணாகவும் இருக்கும்போது அவர்மீது நடவடிக்கையெடுக்க அவர் சார்ந்த கிளைக்கழகத்திற்கு, மாநில ஆட்சிக்குழுவின் முடிவின்படி மண்டலச் செயலரின் வழியே பொதுச்செயலர் உத்தரவிடலாம். கிளைக்கழகம் விதி எண் 40 பிரிவு 2ஆ இல் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பயன்படுத்தி அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உ) கிளைக்கழகம் அந்த உறுப்பினர் மீது நடவடிக்கையெடுக்காத நிலையில், பொதுச்செயலர் மண்டலஆட்சிக்குவின் வழியே நேரடியாக உறுப்பினரிடம் விளக்கத்தினைக் கேட்டு, மாநில ஆட்சிக்குழு நடவடிக்கை எடுக்கலாம்.

i) இந்த நடவடிக்கைக்கான முறையீடுகளைத் தொடர்புடைய உறுப்பினர் பொதுச்செயலரிடம் கொடுக்கலாம். மாநில ஆட்சிக்குழு இந்த முறையீட்டை மூன்று பேர் கொண்ட குழு அமைத்து, அக்குழு விசாரணை செய்து எடுக்கும் முடிவை, பொதுச்செயலர் தொடர்புடைய உறுப்பினருக்குத் தெரிவிப்பார்.

ii) மாநில ஆட்சிக்குழுவால் அமைக்கப்பட்ட முறையீட்டுக்குழுவின் முடிவை ஏற்க மறுக்கும் தொடர்புடைய உறுப்பினர், இந்த முடிவின் மீதான முறையீடுகளை மாநிலத்தலைவரிடம் முடிவு

கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து பதினைந்து (15) நாட்களுக்குள் கொடுக்கலாம். மாநிலத்தலைவர், இந்த முறையீட்டை அடுத்து வரும் மாநிலச்செயற்குழுவில் வைத்து முடிவெடுக்கலாம். மாநிலச் செயற்குழுவின் முடிவே இறுதியானது.

iii) மூன்று நபர் குழுவின் முடிவின் மீது மேல்முறையீடு செய்யவில்லையெனில், குழுவின் முடிவை ஏற்றுக்கொண்டதாகக் கவனத்தில் கொள்ளப்பட்டு, குழுவினுடைய முடிவே இறுதியானதாகக் கருதப்படும்.

**பிரிவு 3) கிளையின் மீது நடவடிக்கை**

அ) மாநிலச்செயற்குழுவின் முடிவுகளுக்குக் கட்டுப்படாமலும், அமைப்பு விதிகளுக்குப் புறம்பாகவும் கழக நலன்களுக்கு எதிராகவும் ஒரு கிளை செயல்படுமானால் அக்கிளை மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்க மண்டலச்செயற்குழு, மாநிலச்செயற்குழு ஆகியவற்றிற்கு உரிமையுண்டு.

ஆ) ஒரு கிளைக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையை மண்டலச் செயற்குழு எடுக்கலாம். அது மாநில ஆட்சிக்குழு, மாநிலச் செயற்குழுவின் பின்னேற்பு பெறுவதற்காகப் பொதுச்செயலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை பற்றிய கடிதம் கிடைத்த பதினைந்து (15) நாட்களுக்குள்ளாகத் தொடர்புடைய கிளை, மாநில ஆட்சிக்குழுவிற்கு முறையீடு செய்யலாம். அந்த முறையீட்டினை மாநிலஆட்சிக்குழு அடுத்து வரும் மாநிலச்செயற்குழுவில் வைக்கும். அந்த முறையீடு பற்றிய இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் மாநிலச்செயற்குழுவிற்கே உரியது.

இ) ஒழுங்கு நடவடிக்கையெடுக்கும் முன் மண்டலச்செயலர்/ பொதுச் செயலர், தொடர்புடைய கிளையிடம், உரிய விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினையும் மண்டலச்செயற்குழு,/ மாநிலச்செயற்குழுவில் வைத்து, அதன்பின்னரே முடிவெடுக்க வேண்டும். அக்கிளை விளக்கம் ஏதும் தராத நிலையில் விளக்கம் தருவதற்கு ஏதும் இல்லை என்று கருதி மேற்கண்ட அமைப்புகள் தாமாகவே முடிவெடுக்கலாம்.

ஈ) எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் எடுப்பதற்கு முன்னால் முறையான விளக்கத்தினைக் கேட்க வேண்டும். மாநில மற்றும் மண்டலச் செயற்குழுவிற்கு, குறைவெண் வரம்பு அதனதன் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும். அந்த நடவடிக்கை, கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும்.

**விதி 41. பயணபடி, நாள்படி**

அ) கழகத்தின் உறுப்பினர், கிளை மண்டல, மாநிலப் பொறுப்பாளர்கள் கழகம் தொடர்புடைய செயல்பாடுகளுக்குத் தமிழ்நாட்டினுள் எங்குச் செல்வதானாலும், ரயில், பேருந்து போன்றவற்றில் பயணம் செய்யலாம். வேறு மாநிலங்களுக்குச் செல்வதாயின் ஆகாய விமானத்திலும் செல்ல அனுமதி உண்டு.

ஆ) மாநிலச் செயற்குழு / பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் கிளைச்செயலர் / தலைவர் / பொருளர் / மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்களின் பயணப்படி, நாட்படி ஆகியவற்றைத் தொடர்புடைய கிளைகளே ஏற்றுக் கொள்ளும்.

இ) உயர்மட்டக்குழு / மாநிலச்செயற்குழு / மாநிலப்பொதுக்குழுவில் கலந்து கொள்ளும் மண்டலத் தலைவர்கள் / செயலர்கள்/ பொருளர்களின் பயணப்படி, நாட்படி ஆகியவற்றைத் தொடர்புடைய மண்டலக்குழுக்கள் ஏற்கும்.

ஈ) மாநில ஆட்சிக்குழு, கழகத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழுக்குழு உறுப்பினர்கள், கூட்டுநடவடிக்கைக்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழுப்பொறுப்பாளர்கள், அய்ஃபெக்டோ பொறுப்பாளர்கள், கட்டட பாரமரிப்புக்குழு அமைப்பாளர், தகவல் மற்றும் தொழில்நுட்பக்குழு அமைப்பாளர், மற்றும் கல்லூரி ஆசிரியர் குரல்' முதன்மைப் பதிப்பாசிரியர் ஆகியோர் கூட்டங்களுக்கு அழைக்கப்படும் போது அவர்களுக்கான பயணப்படி, நாட்படி ஆகியவற்றை மாநிலக்கழக நிதியிலிருந்து வழங்க வேண்டும்.

உ) மாநிலப் பொறுப்பாளர்கள் மண்டல / கிளைகளின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளும் பயண செலவினங்களைத்

தொடர்புடைய மண்டல / கிளைகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஊ) பயணப்படி மற்றும் நாள்படி ஆகியவற்றை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அன்றைய நிலவரத்திற்கேற்ப மாநிலச்செயற்குழு மாற்றி அமைக்கும்.

**விதி 42. காலாந்திர இதழ்**

அ) மாநில அமைப்பிற்கும், உறுப்பினர்களுக்கும் இடையில் சிறப்பான செய்தி தொடர்புக்காக ஒரு காலாந்திர இதழினைக் கழகம் வெளியிடும். இதன் பெயர் ‘கல்லூரி ஆசிரியர் குரல்’ என்பதாகும்.

ஆ) இதன் ஆசிரியர் குழுவாக மாநில ஆட்சிக்குழு செயல்படும்.

இ) கழக உறுப்பினர்களாக உள்ளவர்களில் இருந்து திறமை, புலமை அடிப்படையில் மாநில ஆட்சிக்குழு பதிப்பாசிரியர் குழுவிற்கு நியமனம் செய்திடும் இவர்களில் ஒருவர் முதன்மைப் பதிப்பாசிரியராகச் செயல்படுவார்.

ஈ) பதிப்பாசிரியர் குழுவில் உள்ளோர் பணி ஓய்வு, பணிவிடுவிப்பு, உறுப்பினர் நீக்கம் போன்ற, தவிர்க்க இயலாத காரணத்தால் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்குத் தேவைக்கேற்ப மாநில ஆட்சிக்குழு புதிய ஆசிரியர்களை நியமிக்கும்.

உ) இதழின் பக்கங்கள் மாத / ஆண்டு சந்தா உள்ளிட்ட பிறவற்றைப் பதிப்பாசிரியர் குழுவுடன் கலந்து மாநில ஆட்சிக்குழு நிர்ணயம் மற்றும் மாற்றம் செய்யும்.

**விதி 43. அசையும், அசையா சொத்துக்கள்**

அ) கழகத்தின் சார்பில் வாங்கப்படும் கட்டடம் உட்பட அனைத்து அசையா சொத்துகளும், மகிழுந்து போன்ற அசையும் சொத்துக்களும் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் என்ற பெயரிலே வாங்கப்பட்டுப் பதிவு செய்யப்படும். கட்டடம் வாங்குதல், விற்றல், தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் மாநிலச்செயற்குழுவுக்கு மட்டுமே உண்டு. மாநிலச் செயற்குழுவின் முடிவை அடியொற்றி மாநிலஆட்சிக்குழு, மண்டலத்தலைவர்கள், மண்டலச் செயலர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவுடன் சேர்ந்து முடிவுகளைச் செயல்படுத்தும்.

ஆ) மாநிலச்செயற்குழுவின் முடிவிற்கிணங்க கட்டடம் உட்பட அனைத்து அசையா சொத்துக்களையும், தேவையான அசையும் சொத்துகளையும் வாங்கவோ விற்கவோ உரிய அலுவலகங்களில் சென்று கையொப்பம் இடும் அதிகாரம் மாநில ஆட்சிக்குழுவினர்களுக்கு மட்டுமே உண்டு.

**விதி 44. உறுப்பினர் குடும்ப நலத்திட்டம்**

அ) கழக உறுப்பினர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் கழகம் குடும்ப நலத்திட்டம் என்ற ஒன்றைச் செயல்படுத்தும்.

ஆ) உறுப்பினராக இருப்பவர் பணியில் இருக்கும் காலத்தில் மரணமுற்றால் அவருடைய குடும்பத்திற்கு உதவி செய்திடும் வகையில் இத்திட்டம் அமைந்திடும்.

இ) இத்திட்டத்திற்கான விதிமுறைகள், திட்டத்திற்கு அளித்திட வேண்டிய உறுப்பினர் கட்டணம் மற்றும் பிறவற்றை மாநிலச்செயற்குழு முடிவு செய்து அறிவிக்கும்.

ஈ) உறுப்பினர் பணி ஓய்வு பெற்றால் இத்திட்டத்திற்காகப் பெறப்பட்டத் தொகை திரும்ப அளிக்கப்படும்.

**விதி 45. நீதிமன்றச் செயல்பாடுகள்**

அ) கழகம் வழக்கு தொடர்வதாயின் கழகத்தின் பெயரால் பொதுச்செயலர் உயர்நீதிமன்றத்திலோ அல்லது உச்சநீதிமன்றத்திலோ பிற நீதிமன்றங்களிலோ வழக்கைப் பதிவு செய்வார்.

ஆ) கழகத்தின் முடிவுகளை ஏற்க மறுக்கும் உறுப்பினரோ, கழகச்செயல்பாடுகளை எதிர்த்தோ எவரேனும் வழக்குத் தொடர்வதாயின் அவை தலைமைக் கழகம் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்றத்திலேயே வழக்காகப் பதிவு செய்யமுடியும்.

இ) கிளைப் பிரச்சினை மற்றும் மண்டலப் பிரச்சினை மற்றும் மாநிலப்பிரச்சினை தொடர்பாகவும் தலைமைக் கழகம் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்றத்தில் மட்டுமே வழக்குத் தொடர முடியும்.

**விதி 46. மாநில மாநாடு**

அ) கழகத்தின் மாநில மாநாடு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

ஆ) கழகத் தேர்தல் நடைபெற்ற பின்னர், இரண்டாம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் இம்மாநாடு நடத்தப்படும்.

இ) மாநாட்டிற்கான நாள், இடம் மற்றும் உறுப்பினர் செலுத்திட வேண்டிய மாநாட்டு நிதி போன்றவை இதற்காகக் கூட்டப்படுகின்ற மாநிலச் செயற்குழு முடிவு செய்திடும்.

ஈ) மாநாட்டு நிதியினை மாநிலச்செயற்குழு முடிவு செய்யும் தேதிக்குள் கிளைகள், மாநிலக்கழகத்திற்கு இதற்கெனத் தனியாகப் பராமரிக்கப்படும் வங்கிக்கணக்கில் செலுத்திடக் கூடிய வகையில் தொகையாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ அனுப்பி வைத்திடல் வேண்டும்.

உ) மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டியத் தீர்மானங்களைக் கிளைகள் பொதுக்குழுவில் விவாதித்து அவற்றை மாநிலச்செயற்குழு முடிவு செய்யும் தேதிக்குள் பொதுச்செயலருக்கு அனுப்பி வைத்திடல் வேண்டும்.

ஊ) கழகத்தின் உயர்மட்டக்குழு அவ்வப்போது கூடி மாநாட்டிற்கான அனைத்து செயல்பாடுகளையும் விவாதிக்கும். மாநாட்டுத் தீர்மானங்களையும், மாநாட்டிற்கு அழைக்கப்படுவோர்களையும் இறுதி செய்யும்.

எ) மாநாடு நடைபெறும் பகுதியில் உள்ள மண்டலம் மாநாட்டினை நடத்திடும் பொறுப்பினை ஏற்கும். கூடுதலாக ஆகக்கூடிய செலவினங்களுக்கு எனத் தனது மண்டலக் கிளை உறுப்பினர்களிடம் இருந்து மாநாட்டு நிதி தவிர கூடுதலான நிதியினைப் பெற்றுக் கொள்ளும்.

ஏ) மாநாட்டின் போது ஒரு மாநாட்டு மலரினைக் கழகம் வெளியிடும். இதற்கான மலர்க்குழுவினை மாநில ஆட்சிக்குழு நிர்ணயிக்கும்.

ஐ) மாநாட்டினைச் சிறப்பாக நடத்திடத் தேவையான அனைத்துக் குழுக்களையும் மண்டலம், மாநில ஆட்சிக்குழுவின் ஆலோசனையைப் பெற்று உருவாக்கி, அவ்வப்போது கூடி

களப்பணி ஆற்றும்.

**விதி 47. கழகத்தேர்தல்கள்**

**பிரிவு 1. தேர்தல் நடைமுறைகள்:**

அ) கழகத் தேர்தல் என்பது கிளைத்தேர்தல், மண்டலத் தேர்தல் மற்றும் மாநிலத் தேர்தல் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

ஆ) இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இ) கிளை, மண்டல, மாநிலத் தேர்தல் அறிவிப்புக்கான கால அட்டவணையினைத் தேர்தல் நடைபெற வேண்டிய ஆண்டிற்கு முந்தைய டிசம்பர் மாதத்தில் நடைபெறும் மாநிலச்செயற்குழு நிர்ணயிக்கும்.

ஈ) இச்செயற்குழுவிலேயே மாநிலத் தேர்தலை நடத்திடுவதற்கான மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு முடிவு செய்யப்படல் வேண்டும். இக்குழுவில் இடம் பெறுபவர்கள் நடைபெறவிருக்கும் கழகத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடாதவராக இருத்தல் வேண்டும்.

உ) கிளைகளுக்கான தேர்தல் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் மண்டலங்களுக்கான தேர்தல் பிப்ரவரி மாதத்திலும், மாநிலத்திற்கான தேர்தல் மார்ச் மாதத்திற்குள்ளாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

ஊ) ஜனவரியில் கிளைத்தேர்தல் முடிந்தவுடன் கிளைப் பொறுப்பாளர்களும், பிப்ரவரியில் மண்டலத் தேர்தல் முடிந்தவுடன் மண்டலப் பொறுப்பாளர்களும் உடன் பதவி ஏற்பர். மார்ச் மாதத்தில் மாநிலத் தேர்தல் நடந்து முடிந்தவுடன், அன்றே நடைபெறும் மாநிலப் பொதுக்குழுவில் புதிய மாநிலப் பொறுப்பாளர்கள் பொறுப்பேற்பர்.

எ) ஏதேனும் காரணங்களால் கழகத்தேர்தல் நடைபெறுவது தள்ளி வைக்க நேர்ந்திடின் அதற்கு மாநிலச்செயற்குழுவின் ஒப்புதலையோ அல்லது பின்னேற்பினையோ பெற வேண்டும்.

ஏ) அவ்வாறு தேர்தல் நடைபெறுவது வேறு மாதங்களில் என்றாலும் அனைவருடைய பதவிக் காலமும் மார்ச் 31-ஆம்

தேதியுடன் முடிவடைந்து விடும்.

ஐ) அட்டவணை அறிவிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் தேர்தல் குறித்த முறையீடுகளை விசாரிக்க ஏற்கனவே பதவியில் உள்ள கிளை ஆட்சிக்குழு, மண்டல ஆட்சிக்குழு, மாநில ஆட்சிக்குழு முறையே கிளை, மண்டல, மாநிலத்திற்கான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட மேல்முறையீட்டுக் குழுவினை அறிவித்திடும். தேர்தல் முடிந்த எழுபத்திரண்டு (72) மணி நேரத்திற்குள்ளாகத் தேர்தல் குறித்த முறையீடுகளை மேல்முறையீட்டுக் குழுவிடம் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல்/கூரியர் மூலமாகவோ அளித்திடலாம். அஞ்சல்/ கூரியர் தாமதத்திற்குக் கழகம் பொறுப்பேற்காது. தொடர்புடைய மேல்முறையீட்டுக்குழு, முப்பது(30)நாட்களுக்குள் தனது முடிவினை முறையீடு செய்தவருக்குத் தெரிவித்து, கிளையெனில் மண்டல, மாநிலத் தலைவருக்கும், மண்டலம் எனில் மாநிலத் தலைவருக்கும் நகலினை அனுப்பி வைக்கும்.

ஒ) கிளை மேல்முறையீட்டுக்குழு முடிவுகளையோ அல்லது மண்டல மேல்முறையீட்டுக் குழுவின் முடிவுகளையோ ஏற்க இயலாத உறுப்பினர் முறையீட்டுக் குழுவின் முடிவு அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து ஐந்து (5) நாட்களுக்குள்ளாக மாநிலத் தலைவருக்கு முறையீட்டினைச் செய்யலாம். இதன் மீது முப்பது (30)நாட்களுக்குள் மாநில ஆட்சிக்குழு நிர்ணயிக்கும் மூவர் கொண்ட குழு விசாரணை செய்து முடிவெடுக்கும். இக்குழுவின் முடிவே இறுதியானது. மாநிலத் தேர்தலைப் பொறுத்தவரை மாநில மேல்முறையீட்டுக் குழுவின் முடிவே இறுதியானது.

ஓ) கிளை மற்றும் மண்டலத்தேர்தல் தொடர்பான மேல்முறையீடுகள் மீது ஆட்சிக்குழு நியமித்தக் குழு எடுத்த முடிவினை எதிர்த்தோ அல்லது மாநிலத் தேர்தல் தொடர்பாக மாநில தேர்தல் மேல்முறையீட்டுக் குழு எடுத்த முடிவினை எதிர்த்தோ தலைமைக்கழகம் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்றத்தில் மட்டுமே வழக்கு தொடர முடியும்.

ஔ) கழகத் தேர்தல்நடைமுறை உள்ளிட்ட கழகச் செயல்பாடுகள் தொடர்பாக வழக்கு தொடர்வதானாலும், அது

தலைமைக்கழகம் அமைந்துள்ள சென்னை உயர்நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்ய முடியும். அது போன்ற சூழலில் மாநில ஆட்சிக்குழு, வழக்கறிஞரின் கருத்தினைப் பெற்று, இதற்கெனக் கூடும் மாநிலச் செயற்குழுவின் ஒப்புதலோடு தொடர்புடைய தேர்தலை நடத்திடுவது குறித்து முடிவு செய்யும்.

ஃ) எந்தவொரு தேர்தலிலும் வாக்குகள் சம எண்ணிக்கையில் அமையுமானால் திருவுளச்சீட்டு வாயிலாகவே முடிவெடுக்கப்படும்.

**பிரிவு 2. கழகத் தேர்தலில் போட்டியிடத்தகுதிகள்**

கிளை, மண்டல மற்றும் மாநில ஆட்சிக்குழுத்தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தகுதிகளாவன:

அ) அமைப்பு விதி 24-இன் படி உறுப்பினராக இருந்திடல் வேண்டும்.

